# தினபூமி

thinaboomi.com

திருச்சி, சனி, ஏப்ரல் 26, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**நிதானத்தை கடைப்பிடியுங்கள்: இந்தியா, பாகிஸ்தான் அரசுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள்** ...2-ம் பக்கம்

**பஹல்காம் தாக்குதல்: காஷ்மீர் முதல்வருடன் ராகுல் காந்தி சந்திப்பு** ...3-ம் பக்கம்

**இந்தியா-பாகிஸ்தான் அணிகளை ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம்: ஐ.சி.சி.க்கு பி.சி.சி.ஐ திடீர் கடிதம்?** ...6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று சட்டமன்ற பேரவை, சட்ட மேலவை நிகழ்வுகளின் பதிவுகளை கணினிமயமாக்கும் பணியின் முதற்கட்டமாக, 1952-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, அதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணையதளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், பழனிவேல் தியாகராஜன், சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம்:

# பிரத்யேக இணையதளத்தை துவக்கி வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப். 26-

**1952-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு சட்டமன்ற ஆவணங்கள் நவீன முறையில் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு அதற்கான பிரத்யேக இணையதளத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஏப்.25) தொடங்கி வைத்தார்.**

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது., தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஏப்.25) தலைமைச் செயலகத்தில், சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவை நிகழ்வுகளின் பதிவுகளைக் கணினிமயமாக்கும் பணியின் முதற்கட்டமாக, 1952-ம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, அதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 'tnlasdigital.tn.gov.in' என்ற இணையதளத்தை தொடங்கி வைத்தார்.

2021-ம் ஆண்டு சட்டமன்றப் பேரவையின் நூறாண்டு நிறைவினையொட்டி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரையின்படி, தமிழக சட்டப் பேரவையில் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சரால் 13-8-2021 அன்று தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில், 1921-ம் ஆண்டு முதல் நடைபெற்ற சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவை நிகழ்வுகளின் பதிவுகள் கணினிமயமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சட்டமன்ற ஆவணங்கள் முறையே சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவையின் நடவடிக்கை குறிப்புப் புத்தகங்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள், வெளியீடுகள், புகைப்படங்கள், செய்தித் துணுக்குகள், காணொலி துணுக்குகள் உள்ளிட்ட அனைத்தையும் நவீன முறையில் கணினிமயமாக்கம் செய்யும் பணியானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மேற்பார்வையின்கீழ் தமிழக சட்டப் பேரவைச் செயலகத்தில் நடைபெற்று வருகிறது.

தற்போது முதற்கட்டமாக, 1952-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, அதற்கென வடிவமைக்கப்பட்ட பிரத்யேக 'tnlasdigital.tn.gov.in' என்ற இணையதளத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த இணையதளத்தினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளர் கே. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் விடுபட்டவர்கள்

# தமிழகம் முழுவதும் ஜூன் முதல் விண்ணப்பிக்கலாம்

## 9,000 இடங்களில் முகாம்கள் நடைபெறவுள்ளதாக சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப். 26-

**ஜூன் மாதம் முதல் நான்காம் கட்டமாக மகளிர் உரிமைத்தொகைக்கு விடுபட்டவர்களுக்கான பணிகள் தொடங்கும். தமிழகம் முழுவதும் 9,000 இடங்களில் இதற்கான பணிகள் நடைபெறவுள்ளது என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

**தகுதியானவர்களுக்கு...**

இதுகுறித்து, தமிழக சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.25) முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

உறுப்பினர் ஈஸ்வரன், தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையைப் பற்றி பேசினார்.

மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய அந்த திட்டத்தின் அடிப்படையிலே, தமிழகத்தில் 1 கோடியே 14 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

**கோரிக்கைகள்...**

அதேநேரம், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்டு போனவர்கள் குறித்த செய்தியும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அது அரசின் கவனத்துக்கும் வந்திருக்கிறது.

சட்டப்பேரவையில் அது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எனவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தின் அடிப்படையிலே, பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, உடனடியாக அந்த கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**4-ம் கட்டமாக...**

வருகிற, ஜூன் மாதம் முதல் நான்காம் கட்டமாக 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தின் அடிப்படையிலே, அந்த கோரிக்கைகளைக் கேட்கக்கூடிய பணிகளைத் தொடங்கவிருக்கிறோம்.

9,000 இடங்களில் (முகாம்கள்) அந்தப் பணி நடைபெறவிருக்கிறது. அந்த சமயத்தில், கலைஞர் உரிமைத் தொகை யாருக்கெல்லாம் விடுபட்டு போயிருக்கிறதோ, அவர்கள் முறையாக விண்ணப்பித்தால், நிச்சயமாக விரைவில் உரிமைத் தொகை வழங்கப்படும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# குரூப்-4 தேர்வு தேதி அறிவிப்பு

சென்னை, ஏப். 26-

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 பணியிடங்களுக்கான தேர்வு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதாவது, குரூப் 4 தேர்வில் 3,935 பணியிடங்கள் நிரப்பப்படும் என டி.என்.பி.எஸ்.சி. தெரிவித்துள்ளது.**

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது., கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வனக் காப்பாளர் மற்றும் வனக்காவலர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளுக்கான 3935 காலிப்பணியிடங்களை நிரப்ப ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி IV பணிகளுக்கான அறிவிக்கை தேர்வாணையத்தால் 2025-ம் ஆண்டிற்கான ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நேற்று (25.04.2025) வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் 25.04.2025 முதல் 24.05.2025 வரை தேர்வாணைய இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். தேர்வு 12.07.2025 அன்று நடைபெறும்.

2018 முதல் 2025 வரையுள்ள 8 ஆண்டுகளில், முதன்முறையாக தொடர்ச்சியாக அடுத்தடுத்த ஆண்டுகளில் (2024 மற்றும் 2025) ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி IV பணிகளுக்கான அறிவிக்கை தேர்வாணையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - IV (தொகுதி IV பணிகள்) மூலம் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளில் (வனக் காப்பாளர் மற்றும் வனக்காவலர் பதவிகள் நீங்கலாக), 2022-ம் ஆண்டு அறிவிக்கையில் மூன்று நிதியாண்டுகளுக்கான காலிப்பணியிடங்களும், 2024ம் ஆண்டு அறிவிக்கையில், இரண்டு நிதியாண்டுகளுக்கான காலிப்பணியிடங்களும் ஆக மொத்தம் ஐந்து நிதியாண்டுகளுக்கு 17799 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அதாவது, ஒரு நிதியாண்டிற்கு சராசரியாக 3560 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

2025-ம் ஆண்டு ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு IV(தொகுதி IV பணிகள் மூலம் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளில் (வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் பதவிகள் நீங்கலாக), ஒரு நிதியாண்டிற்கு (2025-26) 3678 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2024 ஆண்டிற்கான அறிவிக்கைகளில் சராசரியாக ஒரு நிதியாண்டிற்கு நிரப்பப்பட்ட காலிப்பணியிடங்களுடன் (3560) ஒப்பிடும்போது, 2025-ம் ஆண்டில் கூடுதலாக காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. மேலும், 2025-ம் ஆண்டு அறிவிக்கையில் வெளியிடப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை, அரசுத் துறை / நிறுவனங்களிடமிருந்து அதிகரித்து பெறப்படும் பட்சத்தில் கலந்தாய்விற்கு முன்பாக மேலும் அதிகரிக்கப்படும் எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ரூ.10,000 கோடி அளவில் முதலீடுகளை ஈர்க்க

# சென்னை அருகே தைவானிய தொழில் பூங்கா அமைக்கப்படும்

## சட்டசபையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு

சென்னை, ஏப்.26-

**சென்னை அருகே ரூ.10,000 கோடி முதலீடுகளை ஈர்க்க தைவானிய தொழில் பூங்கா அமைக்கப்படும் என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையில் நேற்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடந்தது. விவாதத்தில் பங்கேற்று பேசிய உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதில் அளித்து பேசினார். நிறைவாக, துறை சார்ந்த புதிய அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது:-

1. சென்னைக்கு அருகில் சர்வதேச தரத்தில் ஒரு பிரத்யேக தைவானிய தொழில் பூங்கா அமைக்கப்படும். தைவானிய நிறுவனங்களிடமிருந்து ரூ.10,000 கோடி முதலீடுகளை ஈர்ப்பதை இந்த பூங்கா இலக்காகக் கொண்டிருக்கும். இதனால் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

2. அமெரிக்கா, ஜெர்மனி, தென் கொரியா, வியட்நாம் ஆகிய நாடுகளிலுள்ள முதலீட்டாளர்களுக்கு நேரடி வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு சேவைகள் வழங்குவதற்கு, இந்நாடுகளில் வழிகாட்டி நிறுவனத்தின் அமர்வுகள் அமைக்கப்படும்.

3. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் விதமாக மினி டைடல் பூங்கா அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களின் அருங்காட்சியகம் சென்னையில் அமைக்கப்படும்.

5. சின்னசேலம், சங்கரன்கோவில், காரைக்குடி, காட்பாடி, வட்டங்களில், சிப்காட் தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்படும்.

6. திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி வட்டத்தில் தோல் அல்லாத காலணி உற்பத்திப் பூங்கா உருவாக்கப்படும்.

7. திருவாரூர், நாகப்பட்டினம், சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சிப்காட் டெக்ஸ் பார்க்ஸ் எனும் ஆயத்த தொழிற்கூட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

8. திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, மாநல்லூர் மற்றும் தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக கொடுங்கையூர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 22.70 மில்லியன் லிட்டர் மூன்றாம் நிலை மறுசுழற்சி நீர் விநியோகிப்பதற்கான அமைப்பு ரூ.380 கோடியில் ஏற்படுத்தப்படும்.

9. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கம், ஒரகடம் மற்றும் வல்லம் வடகால் தொழிற்பூங்காக்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் தங்குமிட தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் 2,000 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் தங்குமிட வசதிகள் உருவாக்கப்படும்.

10. தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடத்தில் சுமார் 100 ஏக்கரில் கடல்சார் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி பூங்கா அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மேட்டூர் அணை ஜூன் 12-ல் திறப்பு

சென்னை, ஏப். 26-

**பாசனத்துக்காக ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.**

மேட்டூர் அணையில் தற்போது ரூ. 20 கோடி செலவில் அணையின் வலது கரை, இடது கரை, 16 கண் மதகு, ஆய்வு சுரங்கம் பகுதிகளில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாசனத்துக்காக மேட்டூர் அணை திறக்கப்படும்போது பணிகள் நிறுத்தப்படும். பாசனக் காலம் முடிந்த பிறகு மீண்டும் பணிகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பாசனத்துக்காக ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

ஜூன் 12 ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வந்து மேட்டூர் அணை திறந்து வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அணை திறப்பு செய்தியால் டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### பாகிஸ்தானியர்களை உடனே வெளியேற்றுங்கள்:

# அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு அறிவுறுத்தல்

புதுடெல்லி, ஏப்.26-

**காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தை அடுத்து நாடு முழுவதும் உள்ள பாகிஸ்தானியர்களை உடனே வெளியேற்ற அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக அனைத்து மாநில முதல்வர்களுடன், மத்திய உள்துறை அமைச்சர்அமித்ஷா தொலைபேசியில் உரையாடியதாக தகவல் வெளியாகி உள்ளது.**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் குதிரை சவாரி செய்து கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த 22-ம் தேதி பயங்கரவாத கும்பல் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் பரிதாபமாக பலியாகினர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் காஷ்மீருக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டவர்கள் மீது பயங்கரவாத கும்பல் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்திய சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது.

கடந்த காலங்களில் இந்தியா பாகிஸ்தான் இடையே போர் நடந்துள்ள போதிலும், அப்பாவி மக்களைக் குறிவைத்து இதுபோல தாக்குதல் நடத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என பாகிஸ்தான் கூறினாலும், இதன் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத அமைப்பு இந்த கொடூர செயலில் ஈடுபட்டுள்ளது தெரியவந்துள்ளதால், பாகிஸ்தான் மீது பல்வேறு தடை நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. இதன்படி சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு, இந்தியா - பாகிஸ்தான் எல்லையாக பஞ்சாபில் அமைந்துள்ள அட்டாரி - வாகா சோதனைச் சாவடி மூடல் என்பது போன்ற முடிவுகள் இந்திய அரசால் எடுக்கப்பட்டது.

இந்த சூழலில் நேற்று முன்தினம் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பஹல்காம் தாக்குதல் சம்பவம் பற்றி மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்த கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன. அதில், தாக்குதல் சம்பவம் நடந்த பைசரன் புல்வெளியைத் திறக்க அனுமதி இல்லை என்றும் காவல்துறை

(கடைசி பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் வீடுகளுக்கு மாதம் 200-ரூபாய்க்கு இணைய சேவை

## சட்டசபையில் அமைச்சர் தகவல்

சென்னை, ஏப். 26-

**தமிழகத்தில் வீடுகளுக்கு ரூ. 200-க்கு இணைய சேவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.**

சட்டப்பேரவையில் நேற்று தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் முக்கிய அறிவிப்பாக, வீடுகளுக்கு கேபிள் டிவி சேவை போல, 100 எம்பிபிஎஸ் வேகத்தில் மாதம் ரூ. 200 கட்டணத்தில் இணைய சேவை வழங்கப்படும் என்று தெரிவித்தார். மேலும், இ-சேவை மையங்களில் பெறக்கூடிய சேவைகளை, வாட்ஸ் அப் செயலி மூலமாக ஒருங்கிணைத்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -588.90 | -207.35 |
| பாயின்ட் 79,212.53 | பாயின்ட் 24,039.35 |



**தங்கம்**
1 சவரன் ₹72,040
1 கிராம் ₹9,005



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.38

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



## நிதானத்தை கடைப்பிடியுங்கள்:
# இந்தியா, பாகிஸ்தான் அரசுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள்

**ஜெனீவா, ஏப். 26-**

இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐநா வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நா. பொதுச்செயலாளர் சார்பில் பேசிய ஸ்டீபன் டுஜாரிக், அவர் (ஐ.நா. பொதுச்செயலாளர்) எந்த நேரடித் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர் நிலைமையை மிக நெருக்கமாகவும் மிகுந்த அக்கறையுடனும் கண்காணித்து வருகிறார் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல முடியும். இரண்டு நாட்களுக்கு முன்பு, 22-ம் தேதி ஜம்மு-காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு நாங்கள் மிகவும் தெளிவாகக் கண்டனம் தெரிவித்தோம்.



இதில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எனினும், அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், நிலைமை மேலும் மோசமடையாமல் பார்த்துக் கொள்ளவும் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான எந்தவொரு பிரச்சினையும், அர்த்தமுள்ள, பரஸ்பர ஈடுபாட்டின் மூலம் அமைதியாக தீர்க்க முடியும் என்றும், தீர்க்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் நம்புகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத்துக்கு துணை போனதை ஒப்புக்கொண்ட பாகிஸ்தான் அமைச்சர்

**புதுடெல்லி, ஏப். 26-**

இந்தியாவுக்கு எதிராக செயல்படும் பயங்கரவாதக் குழுக்களை கடந்த 30 ஆண்டுகளாக ஆதரித்த தவறுகளை பாகிஸ்தான் செய்தது என அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் குவாஜா எம்.ஆசிப் தெரிவித்திருப்பது அந்நாட்டின் ஒப்புதல் வாக்குமூலமாக பார்க்கப்படுகிறது.



பிரிட்டிஷ் செய்தி நிறுவனமான ஸ்கை நியூஸ் விவாதத்தில் பங்கேற்ற குவாஜா எம்.ஆசிப்பிடம், இந்த பயங்கரவாத அமைப்புகளை பாகிஸ்தான் ஆதரித்து, பயிற்சி அளித்து, நிதியளித்த நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு பாகிஸ்தான் அமைச்சர், "கடந்த 30 ஆண்டுகளாக அமெரிக்காவுக்காக நாங்கள் இதைச் செய்தோம். அமெரிக்காவுக்காக மட்டுமல்லாமல், மேற்கத்திய நாடுகள் மற்றும் இங்கிலாந்துக்காகவும் நாங்கள் இந்த மோசமான வேலையை செய்து வருகிறோம். அது ஒரு தவறு. பாகிஸ்தான் அதனால் பாதிக்கப்பட்டது.

சோவியத் - ஆப்கானிஸ்தான் போரின் போதும், 9/11-க்குப் பிறகு தலிபானுக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான போரின்போதும் மேற்கு நாடுகளுடன் இஸ்லாமாபாத் இணைந்திருக்காவிட்டால் பாகிஸ்தானின் கடந்த காலப் பதிவு குற்றச்சாட்டுக்கு இடமில்லாதது ஆக இருந்திருக்கும் என்று கூறினார். அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுக்காக பயங்கரவாதிகளை ஆதரிப்பதன் மூலம் 'மோசமான வேலை' செய்வதாக பாகிஸ்தான் அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார். காஷ்மீரின் பைசரன் பள்ளத்தாக்கில் 26 அப்பாவி பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, அவரது இந்தப் பேட்டி வந்திருப்பதால், இது மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## இந்தியா-பாகிஸ்தான் இடையே
# எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் துப்பாக்கிச் சண்டை

**புதுடெல்லி, ஏப்.26-**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலுக்கு மத்தியில் இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இரு நாட்டு ராணுவத்துக்கு இடையே துப்பாக்கிச் சண்டை நடந்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் கடந்த 22-ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் -இ-தொய்பா ஆதரவு அமைப்பான டிஆர்எப் பொறுப்பேற்றது. தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் 2 பேர் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து இந்தியா - பாகிஸ்தான் இரு தரப்பிலும் பரஸ்பரம் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பாகிஸ்தானுக்கு சிந்து நதி நீரை வழங்கும் ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுவதாக இந்தியா அறிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய நீர்வளத்துறை செயலாளர் தேபாஸ்ரீ முகர்ஜி, பாகிஸ்தானின் நீர்வளத்துறை செயலாளர் சையத் அலி முர்தாசாவுக்கு எழுதிய கடிதத்தில், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறியதால் சிந்து நதி நீர் ஒப்பந்தம் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரை குறிவைத்து பாகிஸ்தானால் தொடர்ந்து நடத்தப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதம், சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் உரிமைகளைத் தடுக்கிறது. நல்ல நம்பிக்கையுடன் ஒரு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டிய கடமை ஒரு ஒப்பந்தத்திற்கு அடிப்படையானது. அதற்கு பதிலாக நாங்கள் கண்டது இந்திய யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீரை குறிவைத்து பாகிஸ்தானால் தொடர்ந்து நடத்தப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதம்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இடம்பெயர்ந்த காஷ்மீர் பண்டிதர்களுக்கான அமைப்பான பனுன் காஷ்மீர், காஷ்மீருக்கான பயண ஆலோசனையை மத்திய அரசு உடனடியாக வெளியிட வேண்டும். பள்ளத்தாக்கில் நிலைமை "இயல்பிலிருந்து வெகு தொலைவில்" உள்ளது. சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக இந்துக்கள் கடுமையான அச்சுறுத்தலை எதிர்கொள்கிறார்கள் என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலுக்கு மத்தியில் இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இரு நாட்டு ராணுவத்துக்கு இடையே துப்பாக்கிச் சண்டை நடந்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் காலமானார்

**பெங்களூரு, ஏப். 26-**

இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் காலமானார்.



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) முன்னாள் தலைவராக 1994 முதல் 2003 வரை பணியாற்றியவர் கஸ்தூரி ரங்கன் (84). சமீப காலமாக உடல்நலக் குறைவு காரணமாக பெங்களூருவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை முடிந்து வீட்டில் ஓய்வில் இருந்து வந்தார்.

இந்த நிலையில், வயது முதிர்வு காரணமாக, அவரது வீட்டில் நேற்று உயிரிழந்தார். பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் ராமன் ஆராய்ச்சி நிறுவனத்தில் வைக்கப்படும் என்றும், இன்று அவரது உடலுக்கு இறுதிச்சடங்கு நடைபெறும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் பயன்பாட்டில் முக்கிய பங்கு வகித்தவர் ஆவார். 2003 முதல் 2009 வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். தேசிய கல்விக் கொள்கை குழுவின் தலைவராகவும் இருந்தார். இவரது சேவையை பாராட்டி மத்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷன், பத்ம விபூஷன் ஆகிய விருதுகள் வழங்கி கவுரவித்தது குறிப்பிடத்தக்கது.

## பாக். வான் வெளியை பயன்படுத்த தடை:
# இந்திய விமான கட்டணம், பயண நேரம் அதிகரிப்பு

**புதுடில்லி, ஏப்.26-**

இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியில் நுழையத் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், கட்டண உயர்வும், நேரமும் அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதாக இந்தியா அறிவித்தது. மேலும், தூதரக ரீதியில் பாகிஸ்தானுக்கு பல்வேறு தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சிம்லா போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்த பாகிஸ்தான், இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளிக்குள் நுழையத் தடை விதித்து வியாழக்கிழமை மாலை அறிவித்தது.

இதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா உள்ளிட்ட பகுதிகளுக்கு வட மாநிலங்களில் இருந்து இயக்கப்படும் விமானங்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், டில்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்து வட அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் விமானங்கள் மாற்றுப் பாதையில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாகிஸ்தான் வான்வெளியைத் தவிர்ப்பதற்கு அரபிக் கடலுக்கு மேல் நீண்ட தொலைவுக்கு சுற்றுச் செல்ல வேண்டிய சூழல் நிலவுகிறது. பல நூறு கிலோ மீட்டர் சுற்றி மாற்றுப் பாதையில் செல்ல வேண்டிய சூழல் நிலவுவதால், விமானங்களின் கட்டணம் 8 முதல் 12 சதவிகிதம் வரை அதிகரிக்கக் கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.


மேலும், பயண தூரம் அதிகரிக்கும் சூழலில் விமானத்தின் எரிபொருள் அதிகளவில் நிரப்ப வேண்டியது அவசியமாகிறது. இதன்காரணமாக பயணிகள் எண்ணிக்கை, பயணிகளின் சுமை போன்றவற்றை குறைக்க வேண்டிய சூழல் நிலவும். இதனால், ஏற்படும் செலவீனங்களை ஈடுசெய்யும் வகையில் விமானத்தின் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்திய விமான நிறுவனங்களுக்கு பாகிஸ்தான் அரசு வான்வெளி தடை விதிப்பது இது முதல்முறை அல்ல. முன்னதாகவும் இது போன்ற வான்வெளித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புல்வாமா பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பிப்ரவரி 2019 இல், இந்திய விமானப்படை பாகிஸ்தானின் பாலகோட்டில் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இதைத் தொடர்ந்து, இந்திய விமானங்கள் தனது வான் வெளியைப் பயன்படுத்த சில மாதங்களுக்கு பாகிஸ்தான் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**26-04-2025**



**இன்றைய ராசி பலன்கள்**

**மேஷம்:-** இன்று, சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். நண்பர்களுடன் சுமுகமாக இருந்தால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும்.

**ரிஷபம்:-** இன்று ஆரோக்கிய நிலை சீராக இருக்கும். ஏதாவது ஒரு நினைவில் மனம் உழன்று கொண்டிருக்கும். பயண ஆர்வமும், சூழ்நிலை மாற்றத்தையும் விரும்புவீர்கள். சமூக சேவைக்கான எண்ணம் எழும்.

**மிதுனம்:-** தொழிலில் அதிக இலாப வரவால் தனலாபம் பெருகும்., நல் ஆரோக்கியமும் ஏற்படும். கல்வியில் முன்னேற்றத் தடைகள் ஏற்படலாம். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள்.

**கடகம்:-** இன்று, ஆராய்ச்சி மனப்பான்மையோடு செயல்படுவீர்கள். நண்பர்களின் தொடர்பு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். கடல் கடந்த விவகாரங்கள் வெற்றி அளிக்கும்.

**சிம்மம்:-** இன்று, கூட்டாளிகளால் இலாபம் இருக்காது. கதாநாயகனாக எண்ணிக் கொள்வதையும், தியாக மனப்பான்மையும் விடுவது நல்லது. பெண்கள் வழக்குகளை சந்திக்க நேரலாம்.

**கன்னி:-** இன்று தங்கள் மனையாள் இனிய மாற்றங்களையும், இன்பப் பயணங்களையும் விரும்புவார். தன வருமானம் அதிகரிக்கும். உறவுகளை சந்திப்பதால் உற்சாகம் பெருகும்.

**துலாம்:-** இன்று விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். வியாபாரப் பயணங்கள், நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதில் மகிழ்ச்சி ஆகியவை ஏற்படும்.

**விருச்சிகம்:-** குழந்தைகளின் ஆரோக்கியக் குறைவினால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்குவது கூடாது. பயணங்களில் ஏற்படும் தடையால் அமைதியற்ற மனநிலையில் இருப்பார்கள்.

**தனுசு:-** இன்று, மனோ பயம் அதிகரிக்கும். எல்லாவற்றிலும், அனைவரின் மீதும் ஒரு சந்தேக சூழல் நிலவும். ஆரோக்கியக் குறைவு, மனக் கவலைகள் ஏற்பட குடும்ப வாழ்க்கையில் குதூகலம் குறையும்.

**மகரம்:-** இன்று குழந்தைகள் பால் பாச மழை பொழிவார்கள். எல்லாவற்றிலும் சுலபமாக வெற்றிகள் குவியும். பலவழிகளிலும் தன லாபம் அதிகரிக்கும். நண்பன், நண்பர்கள் அருகாமை ஆனந்தம் தரும்.

**கும்பம்:-** இன்று மரியாதைக் குறைவு களால் மன உளைச்சல் ஏற்படலாம். அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் சுமாரான ஆதாயம் அடைவீர்கள். மன விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை.

**மீனம்:-** இன்று, பெற்றோர்களால் நன்மை பல பெறுவீர்கள். மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையும். இட மாற்றங்கள் ஏற்படலாம். விவசாயம் மூலம் இலாபங்கள் இருக்கும். வாகன யோகம் உண்டு.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், பாவேந்தர் பாரதிதாசனின் குடும்பத்தை சேர்ந்த வி.கார்த்தியாயினி, அஸ்வின், செரின், சங்கத்தமிழ், புகழ்வடிவு, ஆதித்யன் மற்றும் குடும்பத்தினர் சந்தித்து, பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## கோகுல இந்திராவின் கணவர் உடல்நலக்குறைவால் மரணம்:
# எடப்பாடி பழனிசாமி நேரில் அஞ்சலி



**சென்னை, ஏப். 26-**

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், கழக அமைப்புச் செயலாளருமான கோகுல இந்திராவின் கணவர் சந்திரசேகர் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் காலமானார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணடைந்தார். இந்த நிலையில் அவரது மறைவுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளரும், கழக செய்தித் தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான S. கோகுல இந்திரா அவர்களுடைய கணவர் A.R. சந்திரசேகர் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன்.

பாசமிகு கணவரை இழந்து மிகுந்த வேதனையில் வாடும் அன்புச் சகோதரி கோகுல இந்திராவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், இந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியையும், தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்றும், சந்திரசேகருடைய ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே உடல்நலக்குறைவால் மறைந்த கோகுல இந்திராவின் கணவர் சந்திரசேகர் உடலுக்கு எடப்பாடி பழனிசாமி நேரில் அஞ்சலி செலுத்தினார்.

## சத்துணவு மையங்களில்
# கட்டமைப்புகளை மேம்படுத்த அரசுக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

**சென்னை,ஏப். 26-**

சத்துணவு மையங்களில் கட்டமைப்பு வசதிகளை திமுக அரசு மேம்படுத்தவில்லை என குற்றம் சாட்டியுள்ள முன்னாள் முதல்வர் ஓபிஎஸ், பழுதடைந்த எரிவாயு அடுப்பு மற்றும் உபகரணங்களுக்குப் பதிலாக புதிய எரிவாயு அடுப்பு மற்றும் உபகரணங்களை வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024-2025 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியத்திற்கான கொள்கை விளக்கக் குறிப்பில், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" என்ற தலைப்பின்கீழ், 'சமையலறை சாதனங்கள் வழங்கல்' என்ற உப தலைப்பின்கீழ், சத்துணவு மையங்களுக்கு 25.41 கோடி ரூபாய் செலவில் புதிய சமையல் உபகரணங்கள் 2022-2023 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று 2025-2026-ம் ஆண்டிற்கான சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியத்திற்கான கொள்கை விளக்கக் குறிப்பில், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" என்ற தலைப்பின்கீழ், 'சத்துணவு மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள்' என்ற உப தலைப்பின் கீழ், சத்துணவு மையங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சத்துணவு மையங்களில் சமையல் உபகரணங்கள் எரிவாயு இணைப்புகளுடன் வழங்கப்பட்டுள்ளன என்றும், 2100 சத்துணவு மையங்களுக்கு வைப்பறையுடன் கூடிய சமையலறை படிப்படியாக கட்டுவதற்காக 173 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவு நிதி ஒதுக்கியும், 18-04-2025 அன்று விருத்தாசலம் அடுத்த செம்பனக்குறிச்சி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும், 09-04-2025 அன்று கடலூர் சத்துணவு மையத்திலும் தீ விபத்து ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு, எரிவாயு உருளையில் பொருத்தப்பட்டுள்ள ரெகுலேட்டர், காஸ் டியூப் போன்றவை பழுதடைந்திருப்பதே காரணம் என்றும், பல சத்துணவு மையங்களில் இந்த நிலைமைதான் நிலவுகிறது என்றும், புதிய காஸ் அடுப்பு கேட்கப்பட்டாலும், ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பழைய காஸ் அடுப்புதான் வழங்கப்படுகிறது என்றும் சத்துணவு மையங்களில் பணிபுரிவோர் தெரிவிக்கின்றனர்.

சத்துணவு மையங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் மாணவ மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், பழுதடைந்த எரிவாயு அடுப்பு மற்றும் உபகரணங்களுக்குப் பதிலாக புதிய எரிவாயு அடுப்பு மற்றும் உபகரணங்களை வழங்கிடுமாறும், அரசால் ஒதுக்கப்படுகின்ற நிதி சரியாக செலவழிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்திடுமாறும் முதல் வரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 20 பில்லியன் வீடியோக்கள் பதிவேற்றம்: யூடியூப் தகவல்

**வாஷிங்டன், ஏப். 26-**

20 ஆண்டுகளில் 20 பில்லியன் வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக யூடியூப் தெரிவித்துள்ளது.

உலகின் மிகவும் பிரபலமான சமூகவலைதளம் யூடியூப். இதில் பலர் வீடியோக்களை, பதிவேற்றம் செய்தும் பதிவிறக்கம் செய்தும் வருகின்றனர். யூடியூப் 2005-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த ஆண்டின் ஏப்ரல் 23ம் தேதி யூடியூபில் முதல் வீடியோ பதிவேற்றம் செய்யப்பட்டது. ஸ்டீவ் சென், சந்த் ஹர்லி, ஜாவித் கரீம் ஆகியோரால் தொடங்கப்பட்ட யூடியூப் தற்போது உலகின் முன்னணி சமூகவலைதளமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், யூடியூப் தொடங்கி 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதில் இதுவரை 20 பில்லியன் வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பஹல்காமில் பாதிக்கப்பட்ட மருத்துவர் மனைவிக்கு முதல்வர் ஸ்டாலின் ஆறுதல்



சென்னை, ஏப்.26-

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் பாதிக்கப்பட்ட மருத்துவர் பரமேஸ்வரனின் மனைவியிடம் முதல்வர் ஸ்டாலின் தொலைபேசியில் ஆறுதல் கூறினார்.

ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் சிலர் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தது இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், பஹல்காம் துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்ட மருத்துவர் பரமேஸ்வரனின் மனைவியிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ஆறுதல் தெரிவித்தார். பரமேஸ்வரன் மனைவியிடம் விசாரித்து தேவைப்படும் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் உறுதி அளித்துள்ளார். தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, அவரது கணவரின் உடல்நிலை குறித்தும், அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்தும் கேட்டறிந்து, தமிழ்நாடு அரசு மூலம் தேவைப்படும் அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்றும் முதல்வர் ஸ்டாலின் உறுதி அளித்தார். முன்னதாக, ஜம்மு - காஷ்மீருக்கு சுற்றுலாச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 நபர்கள் தில்லி தமிழ்நாடு இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டு நேற்று ரயில் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், ஜம்மு காஷ்மீருக்கு சுற்றுலா சென்றுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களை அழைத்து வரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# இ.பி.எஸ். மீதான அவதூறு வழக்கை ரத்து செய்தது சென்னை ஐகோர்ட்

சென்னை, ஏப்.26-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கை ரத்து செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலின்போது, மத்திய சென்னையில் பிரசாரம் செய்த அ.தி.மு.க., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக தயாநிதிமாறன் எம்.பி., செலவிடவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இதற்கு கடும் எதிப்பு தெரிவித்த தயாநிதி மாறன், தன்னை பற்றி தொகுதியில் அவதூறு கருத்துக்களை தெரிவித்ததற்காக எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அவதூறு வழக்கை தாக்கல் செய்தார்.இந்த வழக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் நிலுவையில் இருந்தது. இந்த வழக்கை ரத்து செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில் எடப்பாடி பழனிசாமி மனு தாக்கல் செய்தார். இதுதொடர்பான மனுவில், ஏற்கனவே செய்தித்தாள்களில் வெளியான செய்தியின் அடிப்படையில் பேசியதாகவும், தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசும் பேச்சுக்கள் அவதூறாகாது என்பதால், தனக்கு எதிரான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கோரி இருந்தார். இந்நிலையில் இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி எதிராக தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார். விரிவான உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பஹல்காம் தாக்குதல்:

# காஷ்மீர் முதல்வருடன் ராகுல் சந்திப்பு



ஸ்ரீநகர், ஏப்.26-

காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவை அவரது இல்லத்தில் வைத்து ராகுல் காந்தி சந்தித்து பேசினார்.

காஷ்மீரில் உள்ள பஹல்காம் சுற்றுலா தலத்தில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்தியா மட்டுமின்றி, சர்வதேச அளவில் இந்த தாக்குதல் சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல்காந்தி நேற்று காஷ்மீர் சென்றுள்ளார். அங்கு பயங்கரவாத தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ராகுல் காந்தி ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவை அவரது இல்லத்தில் வைத்து ராகுல் காந்தி சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது பஹல்காம் தாக்குதல் மற்றும் அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பேசப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகளில் மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சிகள்

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஏப்.26-

கல்லூரிகளில் 'மாபெரும் தமிழ்க் கனவு' நிகழ்ச்சிகள் ரூ.3 கோடி செலவில் நடத்தப்படும் என தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

உயர்கல்வித் துறையில் மேற்கொள்ள உள்ள திட்டங்கள் குறித்து 2025-26-ஆண்டுக்கான உத்தேச அறிவிப்புகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

உயர்தனிச் செம்மொழியான தமிழின் தொன்மையினையும் அதன் இலக்கியச் சிறப்புகளையும் இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வகையில் 200 கல்லூரிகளில் அறிஞர்களின் சொற்பொழிவுகள், வல்லுநர்களின் குழு விவாதங்களுடன் மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படும். இதற்காக ரூ.3 கோடி செலவினம் ஏற்படும்.

அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் முகப்பினை மேம்படுத்தும் பணிக்காக கல்லூரிகளில் பராமரிக்கப்பட்டு வரும் நிதியிலிருந்து தலா ரூ.5 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்படும்.

மாணாக்கர்களின் பன்முகத்திறனை கண்டறிந்து, அவற்றை ஊக்குவிக்கும் விதமாக 252 கல்லூரிகளில் ஆண்டுதோறும் கல்லூரிக் கலைத் திருவிழா நடத்தப்படும்.

இதற்கென கல்லூரிக்கு ரூ.2 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5.04 கோடி செலவினம் ஏற்படும்.

கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் விளையாட்டு திறனை வெளிப்படுத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து 252 கல்லூரிகளில் விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்படும். இதற்கென கல்லூரிக்கு ரூ.1.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.3.78 கோடி செலவினம் ஏற்படும்.

பல்வேறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து புதிய பாடப்பிரிவுகள் துவங்கிட கோரிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன. அக்கோரிக்கைகளைப் பரிசீலித்து கல்லூரிகளுக்குத் தேவைப்படும் புதிய பாடப்பிரிவுகளை ஏற்படுத்த பாடப்பிரிவு பரிசீலனைக் குழு அமைக்கப்படும்.

## ஊட்டியில் கவர்னர் கூட்டிய மாநாடு:

# மாநில பல்கலை. துணை வேந்தர்கள் புறக்கணிப்பு

ஊட்டி, ஏப்.26-

ஊட்டி ராஜ்பவன் மாளிகையில் நேற்று காலை துணைவேந்தர்கள் மாநாடு தொடங்கியது. இதில் பெரும்பாலான அரசு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நீலகிரி மாவட்டம், ஊட்டியில் உள்ள ராஜ்பவன் மாளிகையில், தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் கலந்துக் கொள்ளும் மாநாடு, தமிழ்நாடு கவர்னர் ஆன்.என்.ரவி தலைமையில் நடந்து வந்தது. இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனம் செய்யும் அதிகாரமும் இனி தமிழக அரசுக்கே உள்ளது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் ஆளுநரின் அதிகாரம் பறிக்கப்பட்டது. எனினும், அதனையும் மீறி இம்முறை துணை வேந்தர்கள் மாநாடு ஊட்டியில் நேற்றும், இன்றும் நடக்கிறது. இதனால் இந்த மாநாட்டில் துணை வேந்தர்கள் அனைவரும் கலந்து கொள்வார்களா என்ற சர்ச்சை நீடித்து வந்தது.

இந்நிலையில் நேற்று மாநாடு தொடங்கியது. மாநாட்டை குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவி தலைமை வகித்தார். இந்த மாநாட்டுக்கு 49 பல்கலைக்கழக துணை வேந்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் பல்வேறு தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துணை வேந்தர்கள் 32 பேர் கலந்து கொண்டனர்.

அதே சமயம் அரசு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துணைவேந்தர்கள் பெரும்பாலானவர்கள் கலந்து கொள்ளவில்லை. பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் மட்டும் பங்கேற்றார். பெரும்பாலான பல்கலைக்கழகங்களின் இயக்குநர்கள், டீன் மற்றும் பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர். குடியரசு துணைத் தலைவர் மற்றும் கவர்னர் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டை முன்னிட்டு ராஜபவன் மாளிகை மற்றும் தாவரவியல் பூங்கா செல்லும் சாலை, ஊட்டி தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளம் ஆகிய பகுதிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## எல்லையில் போர்ப் பதற்றம்..?

# ஸ்ரீநகரில் இந்திய ராணுவ தளபதி உபேந்திர முக்கிய ஆலோசனை



ஸ்ரீநகர், ஏப்.26-

இந்திய எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், ராணுவத் தலைமை தளபதி உபேந்திர துவிவேதி ஸ்ரீநகருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்யும் அவர், ராணுவ அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனையில் ஈடுபடவுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளது. சிந்து நதி நீர் ஒப்பந்தம் ரத்து, தூதரக அதிகாரிகள் வெளியேற உத்தரவு என அதிரடி அறிவிப்புகளுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தானும் சிம்லா போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ளது.

இதனிடையே, ஜம்மு - காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதற்கு இந்திய வீரர்களும் பதிலடி கொடுத்துள்ளனர். போர்ப் பதற்றத்துக்கு மத்தியில், ஸ்ரீநகர் மற்றும் உதம்பூரில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக ராணுவத் தளபதி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால், பதிலடி கொடுப்பது தொடர்பாக ராணுவ அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனையில் ஈடுபடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிளஸ்-1 பொதுத்தேர்வில்

# கணினி அறிவியல் மாணவர்களுக்கு கருணை மதிப்பெண்: தேர்வுத்துறை

சென்னை, ஏப்.26-

பிளஸ்-1 வகுப்பு கணினி அறிவியல் தேர்வில் மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கப்படும் என தேர்வுத்துறை அறிவித்துள்ளது.

பிளஸ்-2 பொதுத் தேர்வு நிறைவு பெற்றதை தொடர்ந்து பிளஸ்-1 வகுப்புக்கான பொதுத்தேர்வு கடந்த மாதம் 27-ந் தேதியுடன் நிறைவு பெற்றது. இறுதி நாள் அன்று வேதியியல்,

கணக்கு பதிவியல், புவியியல் ஆகிய பாடங்களுக்கான தேர்வு நடந்தது. இதில் உயர்கல்விக்கான முக்கிய பிரிவுகளில் சேருவதற்கு முக்கிய பாடமாக பார்க்கப்படக் கூடிய வேதியியல் வினாத்தாள் சற்று கடினமாக இருந்ததாகவே தேர்வை எழுதிய மாணவ-மாணவிகள் கருத்து தெரிவித்தனர்.

ஒரு மதிப்பெண் வினாக்களில் 12 வினாக்கள் பாடப் பகுதியின் பின்புறத்திலும், 3 வினாக்கள் பாடப்பகுதிக்குள் இருந்தும் கேட்கப்பட்டு இருந்ததாக கூறிய அவர்கள், 2 மதிப்பெண் வினாக்களை தவிர, 3 மற்றும் 5 மதிப்பெண் வினாக்கள் கடினமாக கேட்கப்பட்டு இருந்ததாகவும் தெரிவித்தனர். பிளஸ்-2, பிளஸ்-1 மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு மாணவ-மாணவிகளுக்கான பொதுத் தேர்வு நிறைவு பெற்று, விடைத்தாள் திருத்தும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், பிளஸ்-1 வகுப்பு கணினி அறிவியல் தேர்வில் 24வது கேள்வியை எழுதியிருந்தாலே 2 மதிப்பெண்கள் வழங்கப்படும் என தேர்வுத்துறை அறிவித்துள்ளது. கேள்வி தவறாக கேட்கப்பட்டதால் கருணை மதிப்பெண் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மே 19-ம் தேதி பிளஸ்-1 தேர்வு முடிவுகள் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# வேறு சில கட்சிகளுடனும் கூட்டணி பேச்சுவார்த்தை: இ.பி.எஸ். தகவல்

சென்னை, ஏப். 26-

சில கட்சிகளுடனும் கூட்டணி குறித்து பேசப்பட்டு வருகிறது என்று அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சென்னை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில் அ.தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி பேசியதாவது, கூட்டணி குறித்து கவலைப்படாமல், தேர்தல் பணிகளைச் செய்யுமாறு கட்சியினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அ.தி.மு.க. தலைமையில் தான் கூட்டணி என்று மத்திய அமைச்சர் அமித் ஷா கூறியிருக்கிறார். மேலும் சில கட்சிகளுடன் கூட்டணி குறித்து பேசப்பட்டு வருகிறது. தி.மு.க.வின் தோல்விகளை மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும் என்று தெரிவித்தார்.

## பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய

# பயங்கரவாதிகளின் வீடுகளை குண்டுவீசி அழித்த ராணுவம்



புதுடெல்லி, ஏப்.26-

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய 2 லஷ்கர் பயங்கரவாதிகளின் வீடுகளை பாதுகாப்புப் படையினர் குண்டுவீசி அழித்தனர். அந்த வீடுகளுக்குள் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாக வட்டாரங்கள் தெரிவித்தன.

காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் கடந்த 22-ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் -இ-தொய்பா ஆதரவு அமைப்பான டி.ஆர்.எப். பொறுப்பேற்றது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகளான அடில் உசேன் தோக்கர் மற்றும் ஆசிப் ஷேக் ஆகிய இருவரின் வீடுகள் ஜம்மு காஷ்மீரில் நடந்த தனித்தனி குண்டுவெடிப்புகளில் வியாழக்கிழமை இரவு அழிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களின் வீடுகளுக்குள் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

அடில் உசேன் தோக்கர் அனந்த்நாக் மாவட்டத்தையும், ஆசிப் ஷேக் புல்வாமாவையும் சேர்ந்தவர்கள். ஹாஷிம் மூசா என்கிற சுலேமான் மற்றும் அலி பாய் என்கிற தல்ஹா பாய் ஆகியோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் குறித்து துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ.20 லட்சம் பரிசு வழங்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

# ஜம்மு - காஷ்மீரின் பந்திபோராவில் பயங்கரவாதிகளுடன் மோதல்

ஸ்ரீநகர், ஏப். 26-

ஜம்மு-காஷ்மீரின் பந்திபோரா மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஹல்காமில் பயங்கரவாதிகள் செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து ஜம்மு-காஷ்மீரின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு படையினர் சோதனையை பலப்படுத்தியுள்ளனர். கடந்த புதன்கிழமை தெற்கு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் உள்ள தங்மார்க் பகுதியில் நடைபெற்ற சோதனையின்போது பாதுகாப்பு படை வீரர் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள உரி நாலா பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற சோதனையின்போது 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். வியாழக்கிழமை ஜம்மு-காஷ்மீரின் உதம்பூர் மாவட்டம் பசந்த்கர் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து அங்கு காஷ்மீர் காவல் துறையுடன் இணைந்து ராணுவத்தின் ஒயிட் நைட் கார்ப்ஸ் படை பிரிவும் சோதனையில் ஈடுபட்டது. அப்போது பாதுகாப்பு படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ராணுவ வீரர் ஒருவர் வீரமரணமடைந்ததாக ஒயிட் நைட் கார்ப்ஸ் தெரிவித்தது.

இந்த நிலையில், பந்திபோரா மாவட்டத்தின் குல்னார் பாசிபோரா பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக உளவுத்துறை ரகசிய தகவலின் அடிப்படையில் வெள்ளிக்கிழமை காலை பந்திபோராவின் கோல்னார் அஜாஸ் பகுதியில் இந்திய ராணுவமும் ஜம்மு-காஷ்மீர் காவல்துறையும் இணைந்து கூட்டுத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அப்போது அங்கு மறைந்திருந்த பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர். தேடுதல் நடவடிக்கை மோதலாக மாறியது. இந்த சம்பவத்தில் இதுவரை யாருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

போர்ப் பதற்றத்துக்கு மத்தியில், ஸ்ரீநகர் மற்றும் உதம்பூரில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக ராணுவத் தளபதி உபேந்திர துவிவேதி ஸ்ரீநகர் புறப்பட்டுச் சென்றுள்ளார். பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால், பதிலடி கொடுப்பது தொடர்பாக ராணுவ அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனையில் ஈடுபடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரசு மருத்துவமனையில் ரோபோடிக் அறுவை சிகிச்சை: அமைச்சர் பாராட்டு

சென்னை, ஏப். 26-

சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையில் மாணவிக்கு ரோபோடிக் அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், அரசுப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் 16 வயது மாணவி அஸ்விணிக்கு ரோபோடிக் மூலம் அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து சிகிச்சை அளித்த மருத்துவக்குழுவினரை பாராட்டினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:- கடந்த 3-ம் தேதி அன்று இந்தியாவில் உள்ள அரசு மருத்துவமனைகளில் முதல்முறையாக ரோபோடிக் உதவியுடன் இதய துவார அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னை, மேடவாக்கம் பகுதியைச் சார்ந்த அஸ்வினி என்கின்ற 16 வயது மாணவி தற்போது ஆலந்தூர் பகுதியில் வசித்து கொண்டிருக்கிறார். அவருக்கு இருதயத்தில் இருந்த துவாரத்தை ரோபோட்டிக் உதவியுடன் இன்றைக்கு வெற்றிகரமாக செய்து முடித்து இருக்கிறார்கள். இந்த அறுவை சிகிச்சை செய்து பல மாதங்கள் மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டும். அந்த சிகிச்சைக்கு பிறகு பெரிய அளவிலான தழும்பு உடல் மறைகின்ற வகையில் இருக்கும். எனவே அறுவை சிகிச்சை இல்லாமல் மிகச் சிறிய தழும்போடு இந்த ரோபோடிக் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டிருக்கிறது. இந்த சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.18 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை செலவாகும். இந்த சிகிச்சையும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் செய்யப்பட்டிருக்கிறது.

ஒன்றிய, மாநில அரசு மருத்துவத்துறை வரலாற்றிலேயே வெற்றிகரமாக செய்யப்பட்டிருக்கிறது. 100 புற்று நோய் நோயாளிகளுக்கும், 60-க்கும் மேற்பட்ட இதய நோயாளிகளுக்கும் ரோபோட் உதவியுடனான அறுவை சிகிச்சையால் செய்யப்பட்டுள்ள இந்த கருவியின் மூலம் பயனடைந்திருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமே இந்திய வரலாற்றிலேயே ஒரு மிகச் சிறந்த சாதனையை ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை மருத்துவர்கள் செய்திருக்கிறார்கள். அந்தவகையில் அன்புத்தங்கை அஸ்வினி என்பவர் இந்த சிகிச்சையின் மூலம் பயன் பெற்று நலமுடன் இருக்கிறார், அவரை சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது, இந்த அறுவை சிகிச்சையினை மேற்கொண்ட மருத்துவ குழுவினருக்கு மருத்துவத்துறையின் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஆழியார் ஆற்றில் மூழ்கி சென்னை கல்லூரி மாணவர்கள் 3 பேர் பலி

கோவை, ஏப். 26-

கோவையில் உள்ள ஆழியார் ஆற்றில் மூழ்கி சென்னை கல்லூரி மாணவர்கள் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியார் பகுதிக்கு சென்னை பூந்தமல்லியில் உள்ள பிசியோதெரபி கல்லூரி மாணவர்கள் சுற்றுலா வந்தனர். அவர்கள் ஆழியார் ஆற்றில் இறங்கி குளித்து மகிழ்ந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக 4-ம் ஆண்டு மாணவர்கள் தருண், ரேவந்த், ஆண்டோ ஜெனிப் ஆகிய 3 பேரும் தண்ணீரில் மூழ்கினர். அருகில் இருந்தவர்கள் அவர்களை காப்பாற்ற முயன்றும் முடியவில்லை. இதனால், நீரில் மூழ்கி மாணவர்கள் 3 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இது தொடர்பாக தகவல் கேட்டு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் 3 மாணவர்களின் உடலையும் மீட்டனர். சுற்றுலா வந்த கல்லூரி மாணவர்கள் 3 பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதல் நடந்துள்ளது. இத்தகைய நெருக்கடியான தருணத்தில் மத்திய அரசுக்கு நாங்கள் ஆதரவாக நிற்கிறோம். இது தான் தற்போது முக்கியம். அனைவரும் அமைதி காக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பு விஷயத்தை அரசியலாக்க நாங்கள் விரும்பவில்லை.

- டி.கே.சிவக்குமார்



அரசுப்பள்ளிகளில் காலியாகவுள்ள தூய்மைப்பொறியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். தமிழ்நாட்டு மாணவச்செல்வங்களின் உடல்நலனைப் பாதுகாத்து அவர்களின் எதிர்காலம் சிறக்க, தமிழ்நாடு முழுவதும் அரசுப்பள்ளிகளில் அரசாணை எண் 385/2010-ன் படி அவர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

- சீமான்



காஷ்மீர் தாக்குதலுக்கு இந்தியா வலுவான பதிலடி கொடுக்கும். நாம் ஒற்றுமையாக இருந்தால், யாரும் நம்மை தீய நோக்கத்துடன் பார்க்கத் துணிய மாட்டார்கள். வெறுப்பும் விரோதமும் நமது இயல்பில் இல்லை. ஆனால், தீங்குகளை அமைதியாக சகித்துக்கொள்வதும் இல்லை. உண்மையிலேயே வன்முறையற்ற ஒருவர் வலிமையானவராகவும் இருக்க வேண்டும்.

- மோகன் பகவத்



கடந்த நான்காண்டுகளில் காலியான இடங்கள் எத்தனை? கடந்த நான்காண்டுகளில் நிரப்பப்பட்ட இடங்கள் எத்தனை? இப்போது ஒவ்வொரு துறையிலும் காலியாக இருக்கும் இடங்கள் எத்தனை? என்பது குறித்த வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும். மேலும் குரூப் 4 பணியிடங்களின் எண்ணிக்கையை 10,000 ஆக உயர்த்த வேண்டும்.

- ராமதாஸ்

# திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகள் மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன் நேரில் ஆய்வு



**திருவாரூர்,ஏப்.26-**

திருவாரூர் மாவட்டத்தில்; நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், தப்பாளம்புலியூர் மற்றும் வஞ்சியூர் கிராமம், தப்பளாம்புலியூர் வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.60 கி.மீ., வரை, புது வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.50 கி.மீ., வரை கிருஷ்ணன் வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.50 கி.மீ., வரை வஞ்சியூர் வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.50 கி.மீ., வரை பெரிய வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.50 கி.மீ., வரை மற்றும் கொள்ளை பண்ணை வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.50 கி.மீ., வரை வாய்க்கால் தூர்வாரும் பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவருவதையும்,

தொடர்ந்து, திருவாரூர் வட்டம், மருவத்தூர், ஆந்தகுடி மற்றும் மாங்குடி கிராமம் மருவத்தூர் வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.00 கி.மீ வரை, மாங்குடி வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.60 கி.மீ வரை கடுவங்குடி வாய்க்கால் படுகை தொலைவு 0.750 கி.மீ., முதல் 2.50 கி.மீ., வரை மற்றும் பாலங்குடி வாய்க்கால் படுகை தொலைவு 0.00 கி.மீ., முதல் 2.00 கி.மீ., வரை வாய்க்கால்களை தூர்வாரும் பணி ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவருவதையும்,

திருவாரூர் வட்டம், வேப்பத்தாங்குடி, திருநாட்டியத்தாங்குடி மற்றும் உத்திரங்குடி கிராமம், வேப்பத்தாங்குடி வாய்க்கால் நெடுகை 0.00 கி.மீ முதல் 7.15 கி.மீ வரை, பல்லவனார் வாய்க்கால் நெடுக்கை 0.00 கி.மீ., முதல் 5.00 கி.மீ., வரை, உத்திரங்குடி வாய்க்கால் நெடுக்கை 0.00 கி.மீ., முதல் 3.00 கி.மீ., வரை மற்றும் ராதாநஞ்சை வாய்க்கால் நெடுக்கை 0.00 கி.மீ., முதல் 3.50 கி.மீ., வரை தூர்வாரும் பணி ரூ.23.35 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவருவதையும், திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், ராதாநல்லூர் கிராமம் வெள்ளையாறு இடதுகரை மைல் 80-10-ல் வேப்பத்தாங்குடி வாய்க்கால் பிரிகிறது. இந்த பாசன வாய்க்காலின் மொத்த நீளம் 7.15 கி.மீ., ஆகும். தற்பொழுது தூர்வார எடுத்துக்கொள்ளப்பட்ட நீளம் 0.00 கி.மீ., முதல் 7.15 கி.மீ., வரை. இந்த வாய்க்கால் 7.15 கி.மீ., தூரம் சென்று வெள்ளையாறு-சித்தாறு 'அ' பிரிவு வாய்க்காலில் விழுகிறது. இந்த வாய்க்கால் மூலம் சுமார் 509 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது. இந்த வாய்க்கால் மூலம் ராதாநல்லூர், ஆண்டியூர், குன்னியூர், வேப்பத்தாங்குடி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன. தற்பொழுது தூர்வாரும் பணி நடைபெற்றுவருவதையும்,

திருத்துறைப்பூண்டி வட்டம், மரைக்காகோரையாற்றில் அமைந்துள்ள மேலப்பெருமழை நீரொழுங்கியின் கீழ் உள்ள பாசனப்பகுதிகளுக்கு கோரையாற்றின் இடதுப்புறத்திலிருந்து பிரியும் பள்ளியமேடு வாய்க்கால் வழியாக நீர் ஆதாரம் ஏற்படுத்தும் பணி ரூ.315.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் நடைபெற்றுவருவதையும்,

முத்துப்பேட்டை வட்டம், நொச்சியூர் மற்றும் வீரன்வயல் கிராமங்களில் நொச்சியூர் வாய்க்கால் தொலைவு 0.000 கி.மீ., முதல் 3.500 கி.மீ வரை, தேவன்குளம் வாய்க்கால் தொலைவு 0.000 கி.மீ., முதல் 2.000 கி.மீ., வரை மற்றும் சம்பு ஓடை வாய்க்கால் எல்.எஸ். 0.000 கி.மீ., முதல் 2.000 கி.மீ வரை ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் சிறப்பு தூர்வாரும் பணி நடைபெற்றுவருவதையும், முத்துப்பேட்டை வட்டம், நல்லநாயகிபுரம், ஓவர்குடி, நாராயணபுரம் களப்பால், சிங்களாந்தி கிராமங்களில் நல்லநாயகிபுரம் வாய்க்கால் தொலைவு 0.000 கி.மீ., முதல் 4.000 கி.மீ வரை, ஓவர்குடி வாய்க்கால் தொலைவு 0.00 கி.மீ., முதல் 3.000 கி.மீ வரை, நாராயணபுரம் களப்பால் வடிகால் தொலைவு 0.000 கி.மீ., முதல் 3.00 கி.மீ வரை, சிங்களாந்தி பிரிவு மணிச்சி வாய்க்கால் தொலைவு 0.00 கி.மீ., முதல் 3.000 கி.மீ வரை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு தூர்வாரும் பணியினையும், கோட்டூர் ஒன்றியம், சிங்கமங்கலம் பகுதிலுள்ள வாய்கால் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் 15.5 கி.மீ தூரம் தூர்வாரப்பட்டுவருவதையும், திருத்துறைப்பூண்டி வட்டம், திருப்பத்தூர், இராயநல்லூர் மற்றும் செட்டியமுளை கிராமங்களில் விருமாட்சி வாய்க்கால் எல்.எஸ் 0.000 கி.மீ முதல் 2.500 கி.மீ வரை, திருபத்தூர் வாய்க்கால் எல்.எஸ். 0.000 கி.மீ முதல் 2.500 கி.மீ., வரை, நாட்டு வாய்க்கால் எல்.எஸ். 0.000 கி.மீ., முதல் 3.750 கி.மீ., வரை மண்வாரி இயந்திரம் மூலம் ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெற்றுவருவதையும் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிந்திட அறிவுறுத்தினார்கள்.

இந் நி கழ் வில், செயற்பொறியாளர் (வெண்ணாறு வடிநிலக்கோட்டம்) ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர்;கள் சிதம்பரநாதன், பிராபாகரன், மதியழகன், உதவி பொறியாளர்கள் தங்கமுத்து, வினோத், ஸ்ரீபாலாஜி, கருணாகரன், குமார், விக்னேஷ், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பொதுப்பணித்துறையினர் உடனிருந்தனர்

# புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது




**புதுக்கோட்டை,ஏப்.26-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் மு.அருணா, தலைமையில் (25.04.2025) நடைபெற்றது.

பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த விவசாயம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயிர்ச் சாகுபடி விவரம், 2024-2025 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் முடிய நெல் 94.236 எக்டர், சிறுதானியங்கள் 2156 எக்டர், பயறுவகைப் பயிர்கள் 5259 எக்டர், எண்ணெய்வித்துக்கள் 13532 எக்டர், கரும்பு 1610 எக்டர், பருத்தி 286 எக்டர் மற்றும் தென்னை 14135 எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இடுபொருட்கள் இருப்பு, மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 65.864 மெ.டன் சான்று பெற்ற நெல் விதைகளும், 8.892 மெ.டன் பயறு விதைகளும், 29.975 மெ.டன் நிலக்கடலை விதைகளும், 0.544 மெ.டன் சிறுதானிய விதைகளும் 0.309 மெ.டன் எள் விதைகளும் இருப்பில் உள்ளன. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்றுச் சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விதை விற்பனை உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகளை விநியோகம் செய்திடத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்திற்கு தேவையான ADT-45, CO-55, TPS-5 நெல் விதைகள் அனைத்தும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உர இருப்பு விவரம், விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 4144 மெட்ரிக் டன்னும், டிஏபி 737 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1614 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 3482 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் உர உரிமம் பெற்ற தனியார் நிறுவனங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் 782 மெட்ரிக் டன் யூரியா, 147 மெட்ரிக் டன் டிஏபி, 351 மெட்ரிக் டன் பொட்டாஷ், 313 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

பிரதம மந்திரி விவசாயிகள் கௌரவ நிதியுதவித் திட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதம மந்திரி விவசாயிகளின் கௌரவ நிதித் திட்டத்தின்கீழ் 88732 விவசாயிகள் பதிவு செய்து பயன் பெறுவருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 01.02.2019 க்கு முன்பு நேரடி பட்டா உள்ள விவசாயிகளுக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2000/- வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.6000/- மூன்று தவணைகளாக ஏப்ரல் முதல் ஜுலை வரை, ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை, டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரையிலான காலங்களில் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தொடர்ந்து தவணை தொகை பெறுவதற்கு தங்களது ஆதார் எண்ணை வங்கி கணக்கு எண்ணுடன் இணைத்து DBT Mode-ற்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இதற்கென சிறப்பு உதவி மையம் பிரதி வெள்ளி தோறும் செயல்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பணமில்லா பரிவர்த்தனை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களிலும் உள்ள முதன்மை வேளாண்மை விற்பனை கிடங்கில் பணமில்லா பரிவர்த்தனை மேற்கொள்ளும் வகையில் POS இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் இடுபொருட்களை வாங்க செல்லும் பொழுது தாங்கள் செலுத்தும் பங்கு தொகையினை QR Code மூலமாகவோ, UPI அல்லது ATM அட்டை ஆகியவற்றை உபயோகப்படுத்தி இடுபொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

உழவர் செயலி, வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மானியத்திட்டங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலம் முன் பதிவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் உழவர் செயலியினை பயன்படுத்தி மானியத் திட்டங்களில் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை பெறுவதற்கு முன் பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. உழவர் செயலியை Google Play store- இல் UZHAVAR என உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ. ராஜராஜன் , இணை இயக்குநர் (வேளாண்மை) மு.சங்கரலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வி.பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), அ. அக்பர்அலி (இலுப்பூர்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) உமா, வேளாண்மை அலுவலர் முகமது ரபி, விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நாகை அருகே காக்கழனி தாமோதர விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்



**நாகப்பட்டினம்,ஏப்.26-**

நாகப்பட்டினம் மாவட்டம் காக்கழனி கிராமத்தில் பழமை வாய்ந்த அருள்மிகு தாமோதர விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் 49 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று நடைப்பெற்றது. கும்பாபிஷேக விழா கடந்த 24 ம் தேதி விக்னேஷ்வர பூஜையுடன் தொடங்கியது. தொடர்ந்து வாஸ்து சாந்தி, கோ பூஜையுடன் யாகசாலை பூஜைகளுடன் பூர்ணாஹூதி தீபாரதனை நடைப்பெற்று வந்தது. இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் நிறைவுப்பெற்று பூர்ணாஹூதி தீபாரதனை நடைப்பெற்றது. தொடர்ந்து மங்கல வாத்தியங்கள் முழங்க கடம் புறப்பாடு நடைப்பெற்றது. சிவாச்சாரியர்கள் புனித நீர் அடங்கிய கலசத்தை சுமந்து வந்து வேத மந்திரங்கள் முழங்க ஆலய கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது. இதில் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# மயிலாடுதுறை- சீர்காழி அருகே சென்னை- நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் கருவேல மரங்களை அகற்ற கோரிக்கை

**மயிலாடுதுறை,ஏப்.26-**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த சட்டநாதபுரம் ஊராட்சி வழியே சென்னை நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை NH 45A அமைந்துள்ளது. நான்கு வழிச்சாலை பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டதால் அரசு பேருந்து, பொது போக்குவரத்து மற்றும் கிராம புற போக்குவரத்திற்கு இந்த சாலை பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை, புதுச்சேரி, சிதம்பரம் பகுதியில் இருந்து காரைக்கால், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி என இருமார்த்திலும் அரசு பேருந்து, பயணிகள் தனியார் பேருந்து மற்றும் ம50 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சென்று வர பிரதான சாலையாகவும் இச்சாலை அமைந்துள்ளது.

இதனால் 24 மணி நேரமும் ஓய்வின்றி வாகனங்கள் சென்று வரும் சாலையாக இச்சாலை அமைந்துள்ளது. இந்நிலையில் சட்டநாதபுரத்தில் இருந்து சூரக்காடு வரையிலான இரண்டு கிலோமீட்டர் தொலைவிற்கும் சாலையின் இருபுறமும் கருவேல மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளது. சாலையோரம் வளர்ந்த மரங்கள் வளைந்து தற்போது சாலையின் உள்ளே இரு புறமும் ஆக்கிரமிக்க துவங்கியுள்ளது. இதன் காரணமாக சாலையில் செல்லும் வாகனங்கள் சாலையின் இடது, வலது புறம் செல்ல முடியாமல் சாலையின் மையப்பகுதியில் மட்டுமே செல்கின்றன. இச்சாலையில் இருபுறமும் வாகனங்கள் வரும் பொழுது மையப்பகுதியில் செல்லும் நிலையில் விபத்து ஏற்படும் என்பதால் அச்சத்துடன் கடந்து செல்கின்றனர்.24 மணி நேரமும் வாகன போக்குவரத்து கொண்ட தேசிய நெடுஞ்சாலையில் கருவேல மரங்கள் இருபுறமும் ஆக்கிரமைத்து வருவது வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்டுத்தி வருகிது. எனவே சாலையோரம் ஆபத்தான நிலையில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை விரைந்து அகற்ற வாகன ஓட்டிகள் மற்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது



**தஞ்சாவூர்,ஏப்.26-**

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் (25.04.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது:-

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2024-25 ஆம் ஆண்டிற்கான சம்பா பருவத்தில் 3,22,000 ஏக்கர் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு அறுவடை பணிகள் நிறைவடைந்துள்ளன . நடப்பு கோடை பருவத்தில் நெல் 44,460 ஏக்கர், உளுந்து 36,279 ஏக்கர் மற்றும் எண்ணைய் வித்து பயிர்கள் 26,797 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மாதத்தில் 20,350 ஏக்கர் குறுவை நடவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த திட்டங்களில் பயன்பெறுவதற்கு விவசாயிகள் அவர்களின் சுய விவரங்களை விவசாயிகள் பெரும் பதிவேடு என்னும் புதிய திட்டம் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது'. தஞ்சாவூர் மாவட்டத்தில் இது வரை 99,850 விவசாயிகள் விவரங்கள் பதிவு செய்யபட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு காரீப் மற்றும் ராபி பருவத்தில் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்திட தஞ்சாவூர் I ற்கு ஷிமாபொது காப்பீடு நிறுவனமும் தஞ்சாவூர் II ற்கு அகரிக்கல்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி நிறுவனமும் தேர்வு செய்யபட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு 2024-25 ஆம் ஆண்டில் மண்வளம் காக்கும் வகையில் "மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள், ஆடாதொடா, நொச்சி நடவுச் செடிகள், வேப்பமரக்கன்றுகள், பாரம்பரிய நெல் விதைகள் , மண் பரிசோதனை அட்டைகள் மற்றும் மண் புழு உரபப்படுக்கைகள் வழங்கப்பட்டு 52,300 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 114 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டதில் தரிசு நிலங்களில் முட்புதர்கள் அழிப்பது , வரப்பில் உளுந்து சாகுபடி , உயிரி உரங்கள், உயிர் கட்டுப்பாட்டு காரணிகள், நுண்ணூட்ட கலவை மற்றும் பேட்டரி தெளிப்பான்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படவுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் ஒரு தரிசு நில தொகுப்பு அமைக்கப்படவுள்ளது.

கோடை மற்றும் எதிர்வரும் குறுவை பருவத்திற்கு தேவையான யூரியா, டிஏபி, காம்ப்ள்க்ஸ் உரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

2025-26 ஆம் ஆண்டு குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டம் , மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் , ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. மேலும் இவ்வாண்டு சிறப்பு திட்டமாக உழவரைத் தேடி வேளாண்மை - உழவர் நலத் துறை திட்டம் மூலம் மாதம் இரு முறை முகாம்கள் நடத்தப்பட்டு உழவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் அவர்களது கிராமங்களிலே வழங்கப்படும்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், வேளாண்மை இணை இயக்குநர் வித்யா, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் செல்வி.தமிழ்நங்கை, முதுநிலை மண்டல மேலாளர் நெ.செல்வம், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அய்யம்பெருமாள், நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஜெயசீலன் மற்றும் அலுவலர்கள், ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டம் வீட்டுமனை பட்டா வழங்குவது தொடர்பாக பயனாளிகளின் வீடுகளுக்கே கலெக்டர் கிரேஸ் பச்சாவ் நேரில் சென்று ஆய்வு



**பெரம்பலூர்,ஏப்.26-**

பெரம்பலூர் மாவட்டம் குரும்பலூர், ஈச்சம்பட்டி, மூலக்காடு மற்றும் வடக்கு மாதவி ஆகிய பகுதிகளில் நகர்ப்புற பகுதிகளுக்கு வீட்டுமனை வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்க தேர்வு செய்யப்படவுள்ள பயனாளிகளின் வீடுகளுக்கு கலெக்டர் கிரேஸ் பச்சாவ், (25.04.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நகர்ப்புற பகுதிகளில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வாழும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டிற்காக அரசின் சில வரைமுறைகளுக்கு உட்பட்டு, பட்டா வழங்கிட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அ த ன டிப் ப டை யில், குரும்பலூர் பேரூராட்சிக்குட்பட்ட குரும்பலூர், மூலக்காடு மற்றும் ஈச்சம்பட்டி ஆகிய பகுதியில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் 10 நபர்களும், வடக்குமாதவி பகுதியில் உள்ள 55 நபர்களும், அரசின் விதிகளுக்குட்பட்டு தகுதியுடையவர்களா என்பது குறித்து கலெக்டர் நேரில் சென்று ஆவணங்களைப் பார்வையிட்டு கள ஆய்வு செய்தார். இந்த ஆய்வில், குடியிருப்புவாசிகளிடம், நீண்ட வருடங்களாக வசிப்பதற்கான வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் வருமான வரம்பு உள்ளிட்ட ஆவணங்களை சரிபார்த்து ஆய்வு செய்து, கூரை வீடு மற்றும் ஆஸ்பெட்டாஸ் அட்டை வீடுகளில் வசித்து வரும் நபர்களுக்கு பட்டா வழங்கப் பெற்றதற்கு பின்னர் பேரூராட்சியின் மூலமாக வீடு ஒதுக்கீடு செய்து தருமாறு பேரூராட்சி செயல் அலுவலருக்கும், இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள நபர்களின் குடியிருப்பு பகுதிகளை சரியாக பரப்பளவு அளவீட்டு விண்ணபத்தில் குறிப்பிட வேண்டும் என குறுவட்ட அளவர் மற்றும் நில அளவை ஆய்வாளர்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டம் என்பதாலும், ஏழை, எளிய நபர்களுக்கு உதவிடும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதால் பயனாளிகளை சரியான முறையில் தேர்வு செய்திட வேண்டும் என வருவாய் துறை அலுவலர்களுக்கும் கலெக்டர் அறிவுறுத்தினார்.

மேலும், வீட்டு மனை பட்டா வழங்குவது தொடர்பாக ஆவணங்கள் சரியாக உள்ளவர்களுக்கு அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு வீட்டுமனை வரன்முறைபடுத்தி, நகர்ப்புற பகுதிகளில் வீட்டுமனை வழங்கும் சிறப்பு திட்டத்தின் கீழ் விரைவில் பட்டா வழங்கப்படும் என கலெக்டர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சார் கலெக்டர் சு.கோகுல் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியின் நேர்முக உதவியாளர் (நிலம்) சு.சொர்ணராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தரராமன், பெரம்பலூர் வட்டாட்சியர் பாலசுப்ரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வக்குமார், பூங்கொடி மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



திருச்சி மாவட்டம், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம் அழகாபுரி பேருந்து நிறுத்தம் அருகில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுக்கள் பார்வையிட்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஊராட்சி ஒன்றியம் கீழையூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் .ஹெச்.எஸ்.ஸ்ரீ காந்த் தலைமையில் நடந்தது



**மயிலாடுதுறை,ஏப்.26-**

மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் .ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளுக்கு புதிய நெல் இரக விதைகள் தொடர்பாக ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவன உதவி பேராசிரியர் (மண்ணியல் துறை) முத்துகுமார ராஜா பயிற்சி வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்ட ஆண்டு சராசரி மழை அளவு 1310 மி.மீ ஆகும். 2025 ஏப்ரல் மாதம் நடப்பு நாள் வரை 176.60 மி.மீ மழை பெய்துள்ளது. குறுவை பருவத்தில் 39208 எக்டர் பரப்பு சாகுபடி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை 20.2 எக்டர் பரப்பில் சாதா நாற்றங்கால் 13.5 எக்டர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி நாற்றங்கால் கூடுதலாக 33.7 பரப்பின் நாற்றங்கால் உள்ளது. நேரடி விதைப்பாக 109 எக்டரும் சாதா நடவாக 315 எக்டரும் மற்றும் திருந்திய நெல் சாகுபடி இலக்காக 395 எக்டரும் கூடுதலாக 819 ஏக்டேர் பரப்பில் குருவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விதை இருப்பை பொருத்தமட்டில் குறுவை சாகுபடிக்கு மொத்த விதை தேவை 1250 மெட்ரிக் டன்கள் ஆகும். துறை ரீதியாக 425 மெட்ரிக் டன் விநியோக இலக்காக பெறப்பட்டு தற்போது வரை 204 மெட்ரிக் டன் குறுகிய கால நெல் ரகங்களான ஆடுதுறை 16, ஆடுதுறை 37, ஆடுதுறை 53, கோ 55, எம்.டி.யு 6, டி.பி.எஸ் 5, ஆடுதுறை 57, ஆடுதுறை 43, ஆடுதுறை 45, கோ 51 ஆகியவை விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 241 மெட்ரிக் டன் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உரம் இருப்பை பொருத்தளவில் குறுவைப் பருவத்திற்கு தேவையான யூரியா 1876.4 மெட்ரிக் டன், பொட்டாஷ் 424.559 மெட்ரிக் டன், டி.ஏ.பி 442.311 மெட்ரிக் டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 626.4 மெட்ரிக் டன் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும், கூட்டுறவு சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் தேவையான உயிர் உரங்கள் இருப்பில் உள்ளது. வேளாண் அடுக்ககம் திட்டத்தின்கீழ் விவசாயிகளின் நிலவுடமை பதிவு செய்யும் பணிகள் அனைத்து வட்டாரங்களிலும் நடைபெற்று வருகிறது. அனைத்து விவசாயிகளும் நிலவுடமை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கோடை பயிர் சாகுபடி இலக்காக உளுந்து பயிரில் 25 ஏக்கர் பெறப்பட்டு தற்போது வரை 10 எக்டர் சாதனை (40%) அடையப்பட்டுள்ளது.

எள் சாகுபடி இலக்காக 200 எக்டர் பெறப்பட்டு தற்போது வரை 25 ஏக்கர் (13%) சாதனை அடையப்பட்டுள்ளது. கூடுதலாக 225 எக்டர் இலக்கு பெறப்பட்டு 35 எக்டர் சாதனை (16%) அடையப்பட்டுள்ளது. மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மன்னுயிர் காத்து மண்ணு உயிர் காப்போம் திட்டம் ஆகிய மாநில வேளாண் திட்டங்களுக்கு இலக்கு மற்றும் அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2025-26-திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டில் மயிலாடுதுறை வட்டாரத்திற்கு 10 பஞ்சாயத்துகளும், குத்தாலம் வட்டாரத்திற்கு 11 கிராம பஞ்சாயத்துகளும், சீர்காழி வட்டாரத்திற்கு 8 கிராம பஞ்சாயத்துகளும், கொள்ளிடம் வட்டாரத்திற்கு 9 கிராம பஞ்சாயத்துகளும், செம்பனார்கோவில் வட்டாரத்திற்கு 12 ஊராட்சிகளும் ஆக கூடுதலாக 50 கிராம ஊராட்சிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து கிராமங்களுக்கும் பொறுப்பு அலுவலர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கிராம பஞ்சாயத்துகளில் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்வதற்கு கிராம அளவிலான அடிப்படை புள்ளி விவரங்கள், விவசாயிகளின் தேவைகள் ஆகிய தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் .உமாமகேஷ்வரி, வேளாண்மை துறை இணை இயக்குநர் சேகர்;, நீர்வளத்துறை செயற்பொறியாளர் மாரிமுத்து, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தயாளவிநாயக அமுல்ராஜ்;, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சட்டம்).அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்

# திருச்சி மகாத்மா காந்தி அரசு நினைவு மருத்துவமனைக்கு எக்கோ கார்டியோகிராம் உள்ளிட்டவைகளுக்கு ரூ.98.40 லட்சம் மதிப்பிலான காசோலை

## கலெக்டர் மா.பிரதீப் குமார் வழங்கினார்

திருச்சி,ஏப்.26-

திருச்சி மகாத்மா காந்தி அரசு நினைவு மருத்துவமனையில் பெரியவர் குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்காக ஆய்வுடன் கூடிய எக்கோ கார்டியோகிராம், விட்டு விட்டு துடிக்கும் மின்காந்த தூண்டுதல் சிகிட்சை மற்றும் அனைத்து வகையான வலிகளுக்கும் மீயொலி சிகிட்சை உள்ளிட்ட கருவிகளை மருத்துவமனை பயன்பாட்டிற்காக சென்னை மத்திய மண்டல சேமிப்பு கிடங்கு சார்பாக சமூக பொறுப்பு நிதியின் (ஊளுசு) கீழ் ரூ.98.40 இலட்சம் மதிப்பிலான காசோலையினை கலெக்டர் மா.பிரதீப் குமார், (25.04.2025) வழங்கினார்.

கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை – இருதய துறைக்கு நவீன எக்கோ மெஷின், சமூக பொறுப்பு நிதியின் கீழ் வழங்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்திலுள்ள பொதுமக்களுக்கு சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்தில், கலெக்டர் மா.பிரதீப் குமார், தலைமையில், கி.ஆ.பெ. விஸ்வநாதம் மருத்துவக் கல்லூரி மற்றும் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை,; இருதய நோய் (கார்டியாலஜி) துறைக்கு, மொத்தம் மூன்று பிரோப்களுடன் (வளர்ந்தவர்கள், குழந்தைகள் மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான பிரோப்கள்) இணைக்கப்பட்ட ஒரு நவீன எக்கோ கார்டியோகிராபி மெஷின் வழங்கப்பட்டுள்ளது. இருதய மருத்துவ துறையில் தினமும் சுமார் 200க்கும் மேற்பட்ட எக்கோ கார்டியோகிராபி பரிசோதனைகள் மேற்கொண்டு வருகிறார்கள். இருதய மருத்துவத்திற்காக திருச்சி தவிர புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து இத்தகைய பரிசோதனைகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், இந்த நவீன எக்கோ மெஷின் இருதய துறைக்கு பெரிதும் உதவக்கூடியதாக அமையும்.

இந்த எக்கோ மெஷின் மூலம் வயது முதிர்ந்தோர், குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான இருதய பரிசோதனைகள் மிக துல்லியமாகவும் விரைவாகவும் கிடைக்கப் பெறுகிறது. இதன் மூலம் நமது மாவட்ட மருத்துவமனை மருத்துவ தரத்தை மேலும் உயர்த்தி, அனைத்து மக்களுக்கும் சிறந்த சிகிட்சை வழங்குவதற்கான வாயப்பு அளிக்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது. மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையின் எலும்பியல் துறைக்கு (வலி மேலாண்மை பிரிவு) இரண்டு மேம்பட்ட மருத்துவ உபகரண அலகுகளை - ஒரு துடிப்பு மின்காந்த தூண்டுதல் மற்றும் ஒருங்கிணைந்த கேளா ஒலி (அல்ட்ரா சவுண்ட்) சிகிச்சை கருவி வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிநவீன சாதனங்கள் நோயாளிகளுக்கு வழங்கப்படும் வலி மேலாண்மை சிகிட்சையின் தரத்தை, குறிப்பாக தசைக்கூட்டு கோளாறுகள் மற்றும் நாள்பட்ட வலி நிலைகளை பரிசோதனை செய்யும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

மேற்கண்ட உபகரணங்களை சென்னை மத்திய மண்டல சேமிப்பு கிடங்கு சார்பாக சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.98.40 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. நோயாளி பராமரிப்பை மேம்படுத்துவதற்கும் மருத்துவமனையின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் மிகப்பேருதவியாக அமையும்.

இந்நிகழ்வில் இந்திய உணவு கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஜெசிந்தா லாசரஸ், , மருத்துவமனை முதல்வர் மரு.எஸ்.குமரவேல், மருத்துவமனை கண்காணிப்பாளர்கள் மரு.உதயா அருணா, மரு.அருண் ராஜ், மத்திய மண்டல சேமிப்பு கிடங்கு மண்டல மேலாளர் ராகுல் நா. கெய்க்வாட், மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பஹல்காமில் தீவிரவாதிகள் தாக்குதலில் இறந்தவர்களுக்கு மோட்ச தீபம்



**சுவாமிமலை,ஏப்.26-**

காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் தீவிரவாதிகள் தாக்குதலில் இறந்த சுற்றுலாப் பயணிகளுக்கு இந்து மக்கள் கட்சி சார்பில் நேற்று மாலை மகாமக குளக்கரையில் மோட்ச தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சிக்கு இந்து மக்கள் கட்சி மாநில பொதுச் செயலர் டி.குருமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட பொறுப்பாளர் பாலா முன்னிலை வகித்தார்.

பாரதிய ஜனதா கட்சி கிழக்கு, மேற்கு ஒன்றிய தலைவர்கள் கணேசமூர்த்தி, நீலமேகம், சிவசேனா மாநில துணைத்தலைவர் பூக்கடை ஆனந்த், இந்து மக்கள் கட்சி பொறுப்பாளர்கள் சேகர், ஹரிஷ், மணிகண்டன், மற்றும் திரளானோர் கலந்து கொண்டு மகாமக குளக்கரையில் இருந்து மோட்ச தீபம் ஏற்றி ஊர்வலமாக வந்து காசி விஸ்வநாதர் கோயிலில் மௌன அஞ்சலி செலுத்தினர். ஏற்பாடுகளை மாவட்ட தலைவர் லோகசெல்வம் மற்றும் நிர்வாகிகள் செய்தனர்.

# ஒருங்கிணைந்த குற்றப்பிரிவினரின் சட்ட விரோத நடவடிக்கைகள் பெரிதும் குறைந்துள்ளது

## சென்னை பெருநகர காவல் தகவல்

**சென்னை ஏப் 26-**

ஒருங்கிணைந்த குற்றப் பிரிவினரின் சட்ட விரோத நடவடிக்கைகளை பெரிதும் குறைத்துள்ளது என சென்னை பெருநகர காவல் துறை தகவல் தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தியில், சென்னை பெருநகர காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், குற்றச் செயல்களில் ஈடுபடும் முக்கியக் குழுக்களை கண்காணித்து, அவர்களை எதிர்கொள்வதுடன், தனிப்பட்ட விரோதங்கள், பழிவாங்கும் நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் மற்றும் தொழிலதிபர்களை இலக்காகக் கொண்டு செயல்படும் மிரட்டல் குழுக்கள் போன்ற குற்றச் செயல்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டு, 23.07.2024 அன்று, சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் ஆ.அருண், உத்தரவுப்படி நுண்ணறிவுப் பிரிவில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குற்றப் பிரிவு இணை ஆணையாளர், துணை ஆணையாளர் நேரடி மேற்பார்வையில் தகுந்த புலன்கள் மூலமும், பருந்து போன்ற தொடர் கண்காணிப்பு நவீன வசதிகளுடன் கொண்ட திட்டங்கள் மூலம் பல்வேறு சாதனை புரிந்து, மக்களின் பாதுகாப்பை மேம்படுத்தியுள்ளது.

இப்பிரிவினரின் ஒருங்கிணைந்த முயற்சியால், சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குற்றம் புரிந்த / குற்றம் புரிய வாய்ப்புள்ள, புறநகரில் வசிக்கும் நபர்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், மேற்படி குற்றம் சம்பந்தப்பட்ட 786 தகவல்கள் இதுவரையில் சேகரிக்கப்பட்டு, உள்ளூர் காவல் துறையினருக்கு அனுப்பப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவினரால், கொடுங்குற்றத்தில் ஈடுபடவாய்ப்புள்ள 4,300 போக்கிரிகளும், 476 பெரிய குழுக்களும், 223 சிறிய குழுக்களும் கண்காணிக்கப் படுவதுடன், அவர்கள் சார்ந்த வழக்குகள் முறையாகக் கண்காணிக்கப்பட்டு, மூன்று 3 ஏ வகை சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளுக்கும், 8 பி வகை சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளுக்கும், 27 சிவகை சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளுக்கும், 01கே டீ வகை குற்றவாளிக்கும் என மொத்தம் 39 குற்றவாளிகளுக்கும் அவர்கள் சார்ந்த குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றும் தரப்பட்டுள்ளது.மேலும், இப்பிரிவு உருவாக்கப்பட்டதன் விளைவாக, பெரும்பான்மையான குழுக்கள் முடக்கப்பட்டுள்ளதோடு, 32 ஏ+ வகை குற்றவாளிகளும், 108 ஏ வகை குற்றவாளிகளும், 325பி வகை குற்றவாளிகளும், 549 சி வகை குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டதோடு, 417 குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில், கொடுங்குற்றத்தில் ஈடுபட்டு பல்வேறு வழக்குகளில் குற்றவாளிகளாக இருந்துவரும், சி.டி.மணி, தக்ஷிணா மூர்த்தி, ஆடு சரவணன், அகரம் கதிர், பாம் சரவணன், காவாங்கரை விஜி. வீரராகவன், ரூபன், ராம்கி, வெள்ளை சஞ்சய், சூழ்ச்சி சுரேஷ், தொப்பை கணேஷ், அறிவழகன், தில்குமார் மதன், மோகன், ஜான்சன், வெள்ளை சுதா, கார்டன் சரத்6 மற்றும் மோசஸ் போன்ற 19 போக்கிரிகளும் அடங்குவர்.மேலும், நீதிமன்றப் பிடியாணை பிறக்கப்பட்டு தலைமறைவாக இருந்த 35 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் அவர் தம் உறவினர், நண்பர்கள் தொடர்புடைய அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கண்காணிக்கப்பட்டு, கொடுங்குற்றச் செயல்களில் தொடர்பு ஏற்படாதவண்ணம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஒருங்கிணைந்த குற்றப் பிரிவின் நடவடிக்கைகளால் முழுவதும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் மீ.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது



**கரூர்,ஏப்.26-**

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமையில் (25.04.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசால் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்ற அனைத்துத் திட்டங்களையும் வேளாண் பெருமக்களுக்கு முழுமையாகக் கொண்டு சேர்ப்பதுடன் விவசாயிகளின் குறைகளை அனைத்துத் துறை அலுவலர்கள் அறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் இதுபோன்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகின்றன. கரூர் மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த 10 முதல் 15 நாட்களுக்குள் தொடர்புடைய விவசாயிகளுக்கு அஞ்சல் மூலம் பதில் அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் போதுமான அளவில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், யூரியா 2344 மெட்ரிக் டன்னும், டிஏபி 260 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1636 மெட்ரிக் டன்னும், என்.பி.கே. 1811 மெட்ரிக் டன்னும் என மொத்தம் 6,051 மெ.டன் இரசாயன உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தின் இயல்பான ஆண்டு மழை அளவு ஏப்ரல் மாதம் வரை 64.00 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டு ஏப்ரல்-2025 வரை 74.84 மி.மீ மழை பெய்துள்ளது. அதேபோன்று, ஏப்ரல் மாதம் முடிய 550 ஹெக்டர் பரப்பளவில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதே போல், கரூர் மாவட்டத்திலுள்ள கரூர், குளித்தலை, பள்ளப்பட்டி, வேலாயுதம்பாளையம், வெங்கமேடு மற்றும் காந்திகிராமம் ஆகிய 6 உழவர் சந்தைகளில் 51.04 மெ.டன் காய்கறிகள் ரூ. 19.37 இலட்சம் மதிப்பீட்டில் விற்பனையாகி உள்ளதென மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்தார்கள்.

இன்றைய தினம், விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 117 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மேலும், கரூர் மாவட்டத்திலுள்ள 50 நீர் நிலைகளில் விவசாயிகள் மற்றும் மட்பாண்ட தொழிலாளர்கள் வண்டல், களிமண் போன்றவற்றை எவ்வித கட்டணமுமின்றி வெட்டி எடுத்து செல்ல அருகிலுள்ள இ சேவை மையங்களில் தொடர்புடைய ஆவணங்களுடன் இணையதள வழியில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், குளித்தலை சார் கலெக்டர் தி.சுவாதி ஶ்ரீ இ.ஆ.ப., வேளாண்மை இணை இயக்குநர் ப.சிவானந்தம், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், கால்நடை பராமரிப்புத் துறை (இணை இயக்குநர்) சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வி. உமா, விவசாயிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பொ.ரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது



**அரியலூர்,ஏப்.26-**

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பொ.இரத்தினசாமி, தலைமையில் (25.04.2025) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 107.56 மி.மீ. மழை பெறப் பட் டுள் ளது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 2893 மெ.டன் யூரியா, 1158 மெ.டன் டி.ஏ.பி 794 மெ.டன் பொட்டாஷ்; மற்றும் 2126 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மூலம் 12 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 15 மெ.டன் என கூடுதலாக 27 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 25 மெ.டன் நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது. நெல் விதைகள் நெல் நுண்சத்து, உயிர் உரங்கள், சூடோமோனாஸ், ட்ரைக்கோடெர்மா போன்ற உயிரியல் காரணிகள் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

வேளாண் அடுக்குத் திட்டம்: தமிழக அரசின் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களில் விவசாயிகள் இணைந்து பயன்பெரும் வகையில் வேளாண் மைத் து றை யில் வேளாண்மை அடுக்குத் திட்டம் உருவாக்கப்பட்டள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள் இணைந்திட ஆதார் எண், புகைப்படம், வங்கி கணக்கு எண், நில உரிமை ஆவணங்கள் ஆகியவை கிரைன்ஸ் என்ற இணைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. கிரைன்ஸ் வலைதளத்தின் மூலம் அரசின் நன்மைகள் சரியான பயனாளிகளுக்கு சென்றடைவதை உரிதிபடுத்திட முடியும்.

இது ஒற்றை சாலர வலைதளமாக செயல்படுவதால் விவசாயிகள் 13 துறைசார்ந்த திட்டங்களுக்கும், ஒரே இடத்தில் பதிவு செய்து அரசின் உதவிகளை பெற்றுக்கொள்ளலாம். எனவே பதிவு செய்யாத விவசாயிகள் உடனடியாக உரிய ஆவணங்களுடன் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் ஆகியோர்களை அணுகி பயன்பெறுமாறு கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்துள்ளார். முன்னதாக, இக்கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பகல்ஹாம் தாக்குதலில் உயரிழந்தவர்களுக்கு கலெக்டர் , மாவட்ட நிலை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் மவுன அஞ்சலி செலுத்தினர்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, வேளாண்மை இணை இயக்குநர் கீதா, மாவட்ட நிலை அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் அவர்கள், மயிலாடுதுறை**

பானுமதி,
க/பெ.லேட்.நாகராஜன்
கீழத் தெரு, 19 செங்குடி கிராமம்,
குத்தாலம் வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது கணவர் “நாகராஜன்” த/பெ.குருசாமி என்பவர் கடந்த 15.01.1987 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

பானுமதி, க/பெ.நாகராஜன்,
19 செங்குடி கிராமம்,
குத்தாலம் வட்டம்.

**ENROLMENT NOTICE**

After 10 days of the Publication of this notice and with in THREE months thereafter I, M.V.DINAHARAN, S/o. K.Muthuselvan, aged 32 years permanently Residing at No.61, Sundar Nagar, T.Pet Road, Musiri, Trichy District, Tamilnadu-621 211 having my enrolment as an Advocate moved before the Bar council of Tamilnadu Bar council buildings, High Court campus Chennai-104

Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days.

M.V.DINAHARAN.

# சென்னையில் காணாமல் போன 4 பேரை காவல் கரங்கள் உதவி மையம் மீட்டது

**சென்னை ஏப் 26**

சென்னை பெருநகர காவல், காவல் கரங்கள் உதவி மையம் மூலம் 4 பேர் காணாமல் போனவரைகளை மீட்கப்பட்டு குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டனர்.

சென்னை பெருநகர காவல் “காவல் கரங்கள்” உதவி மையம் மூலம் கடந்த வாரத்தில் 4 வீடற்று உதவிகளற்று இருந்த நபர்களை தன்னார்வலர்கள், காவல் துறையினருடன் மீட்டு, தகுந்த உதவிகள் வழங்கப்பட்டு அரசு தன்னார்வ தொண்டு அமைப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு உரிய விசாரணை மேற்கொண்டு காணாமல் போனவர்களாக விபரங்கள் தெரியவர உதவி மையம் மூலம் அவர்களது குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு மீண்டும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனர்.

**காணாமல் போனவர்கள்**

இந்த ஆண்டு 2025ல் மொத்தம் 85 பேரை காணாமல் பரிதவித்த அவர்களது குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின் பேரில், பொது மக்கள் எளிதில் அணுக கூடிய வகையிலும், உதவிகள் தேவைபடும் பொதுமக்களுக்கு உரிய அவசர உதவிகளை வழங்கிடவும், சென்னை பெருநகர காவல் துறை பல்வேறு வகைகளில் பொதுமக்களுக்கு உதவி வருகிறது.

அதன் பேரில் நவீன காவல் கட்டுப்பாட்டு அறை, உதவி மையங்கள் மூலமாக உதவிட பெண்களுக்கான உதவி எண் (1091), குழந்தைகள் (1098), மூத்த குடிமக்கள் (1253), பந்தம் திட்டத்தின் கீழ் 75 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான உதவி எண்கள் (94999 57575), எஸ்எம்எஸ் அடிப்படையிலான புகார்கள் (95000 99100), மற்றும் வீடற்ற மற்றும் கைவிடப்பட்ட நபர்களை மீட்பதற்கான “காவல் கரங்கள்” உதவி எண் (94447 17100) உள்ளிட்ட அவசர சேவைகள் மூலம் உடனடியாக பொதுமக்களுக்கு உதவியையும், வீடற்ற உதவிகளற்ற நபர்களுக்கு உதவிட ஒருங்கிணைப்பையும் உறுதி செய்கிறது.

**உடல்நலம் பாதிப்பு**

குறிப்பிடத்தக்க வகையில் கடந்த 14.04.2025 அன்று, இலக்கியா (29) என்பவர் உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு, கீழ்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஹால்ஸ் ரோட்டில், காவல் கரங்கள் குழு மூலம் மீட்டு, உடனடி விசாரணை மற்றும் ஒருங்கிணைப்பின் மூலம், மதுரை, செல்லூரில் அவரது குடும்பத்தினரைக் கண்டறிந்து அவரது கணவர்அன்புவுடன் பாதுகாப்பாக மீண்டும் சேர்த்து வைக்கப்பட்டார். இதே போன்று பிரியா (பெ/07), ராஜலானி (பெ/43), மற்றும் சோனா ஸ்ரீனிவாசன் (பெ/54) ஆகியோரை அவர்களது குடும்பத்தினர் தேடிவந்த நிலையில் கண்டறிந்து மீண்டும் சேர்த்து வைக்கப்பட்டனர்.

# போலி தங்க நகைகளை அடகு வைக்க முயன்றவர் கைது

**சென்னை ஏப் 26-**

சென்னை, கொளத்தூர், விபிசி நகர் 1வது தெருவில் வசித்து வரும் தினகரன், என்பவர் தி.நகர் பகுதியில் உள்ள இந்தியா கோல்ட் என்ற தங்க நகை கடன் வழங்கும் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். கடந்த 22 ந்தேதி அன்று மேற்படி தங்க நகை கடைக்கு, தங்க நகைகளை அடமானம் வைக்க வந்த நபர் ஒருவர் கொடுத்த, சுமார் 26கிராம் எடையுள்ள 1 மோதிரம் மற்றும் 1 டாலரை பரிசோதனை செய்தபோது, அது போலி நகைகள் என தெரியவந்தது. இது குறித்து தினகரன் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார்கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

தேனாம்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தனஞ்செயன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 26 கிராம் எடையுள்ள போலி தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட தனஞ்செயன் மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரி தனஞ்செயன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### இந்தியா-பாகிஸ்தான் அணிகளை
# ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம்: ஐ.சி.சி.க்கு பி.சி.சி.ஐ திடீர் கடிதம்



**மும்பை, ஏப்.26-**

ஐ.சி.சி. தொடர்களில் இந்தியா - பாகிஸ்தானை ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு கடிதம் எழுதியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

**26 பேர் உயிரிழப்பு...**

ஜம்மு - காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் சிலர் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தது இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. 2008 ஆம் ஆண்டு மும்பையில் ஏற்பட்ட வெடிகுண்டு தாக்குதலுக்குப் பிறகு இந்திய அணி, பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவதை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டது. மேலும், சமீபத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி தொடரிலும் இந்திய அணி விளையாட மறுத்தது. இந்தியாவுக்கான போட்டிகள் மட்டும் ஐக்கிய அரபு அமீரகத்தில் துபாயில் நடத்தப்பட்டன.

**ஒரே குழுவில்...**

இந்த நிலையில், பி.சி.சி.ஐ. துணை தலைவர் ராஜீவ் சுக்லா ஐ.சி.சி.க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருதரப்பு போட்டிகளில் விளையாடாவிட்டாலும், இரு அணிகளும் ஐ.சி.சி. தொடர்களில் ஒரே குழுவில் தான் விளையாடுகின்றன. இந்தப் போட்டிகளுக்கு ரசிகர்களிடம் அதிக ஆதரவும் எதிர்பார்ப்பும் நிலவுகிறது. இனி நடக்கவிருக்கும் ஐ.சி.சி. தொடர்களில் இரு அணிகளையும் ஒரே குழுவில் இணைக்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஐ.சி.சி. தரப்பில் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

# ஹேசில்வுட்டுக்கு பிளவர் புகழாரம்

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை 11 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆர்.சி.பி. த்ரில் வெற்றி பெற்றது. இதற்கு முக்கிய காரணம் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட்டு தான். சிறப்பாக பந்து வீசிய ஹேசில்வுட் ஆட்டநாயகன் விருது வென்றார். இந்த நிலையில் ஆர்.சி.பி. அணியின் தலைமை பயிற்சியாளரான ஆண்டி பிளவர், ஹேசில்வுட்டை புகழந்துள்ளார்.

இது தொடர்பாக ஆண்டி பிளவர் கூறுகையில் “ஹேசில்வுட் சிறப்பாக செயல்படுத்தக்கூடியவர். அவர் உலகத்தரம் வாய்ந்த பந்து வீச்சாளர். எந்தவொரு வடிவிலான போட்டியிலும் நெருக்கடியான நிலையில் சிறந்தவர். அவர் சிறந்த லெந்த் பவுலிங்கிற்கு பெயர் பெற்றவர் என்பது எனக்குத் தெரியும், ஆனால் அவருக்கு சிறந்த ஆல்-ரவுண்ட் திறமைகள் உள்ளன. இந்த சீசனில் புவி சிறப்பாக பந்து வீசி வருகிறார். ராஜஸ்தானுக்கு எதிராக யாஷ் தயால் அட்டகாசமாக பந்து வீசினார். குறிப்பாக கடைசி ஓவரில் அசத்தினார். இவ்வாறு ஆண்டி பிளவர் தெரிவித்தார்.

# சொந்த மைதானத்தில் ஆர்.சி.பி. முதல் வெற்றி



**பெங்களூரு, ஏப்.26-**

விராட் கோலி, ஹேசில்வுட் அபார ஆட்டத்தால் 11 ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தியது ஆர்.சி.பி.

**விராட் கோலி விளாசல்...**

ஐ.பி.எல். தொடரின் 42-வது லீக் போட்டி பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆர்.சி.பி., ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய ஆர்.சி.பி. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 205 ரன்கள் குவித்தது. விராட் கோலி 42 பந்தில் 8 பவுண்டரி, 2 சிக்சருடன் 70 ரன்கள் விளாசினார். தேவ்தத் படிக்கல் அரை சதம் கடந்து 50 ரன்னில் அவுட்டானார். பில் சால்ட் 26 ரன்னும், டிம் டேவிட் 23 ரன்னும், ஜிதேஷ் சர்மா 20 ரன்னும் எடுத்தனர்.

**ஜெய்ஸ்வால் அதிரடி...**

இதையடுத்து, 206 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் அதிரடியாக ஆடினார். அரை சதம் கடப்பார் என எதிர்பார்த்த நிலையில் 19 பந்தில் 3 சிக்சர், 7 பவுண்டரி உள்பட 49 ரன்னில் அவுட்டானார். நிதிஷ் ராணா 28 ரன்னும், ரியான் பராக் 22 ரன்னும் எடுத்தனர். கடைசி கட்டத்தில் துருவ் ஜூரல் அதிரடி காட்டினார். அவர் 34 பந்தில் 47 ரன்கள் எடுத்து அவுட்டானார்.


**6வது வெற்றி...**

இறுதியில், ராஜஸ்தான் ராயல்ஸ் 194 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 11 ரன்கள் வித்தியாசத்தில் ஆர்.சி.பி. திரில் வெற்றி பெற்றது. இது ஆர்.சி.பி. அணியின் 6வது வெற்றி ஆகும். ராஜஸ்தான் அணியின் 7வது தோல்வி இதுவாகும். ஆர்.சி.பி. அணி சார்பில் ஹேசில்வுட் 4 விக்கெட்டும், குருணால் பாண்ட்யா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குஜராத் | 8 | 6 | 2 | 12 | +1.104 |
| 2 | டெல்லி | 8 | 6 | 2 | 12 | +0.657 |
| 3 | பெங்களூரு | 9 | 6 | 3 | 12 | +0.482 |
| 4 | மும்பை | 9 | 5 | 4 | 10 | +0.673 |
| 5 | பஞ்சாப் | 8 | 5 | 3 | 10 | +0.177 |
| 6 | லக்னோ | 9 | 5 | 4 | 10 | +0.054 |
| 7 | கொல்கத்தா | 8 | 3 | 5 | 6 | +0.212 |
| 8 | ராஜஸ்தான் | 9 | 2 | 7 | 4 | -0.625 |
| 9 | ஐதராபாத் | 8 | 2 | 6 | 4 | -1.361 |
| 10 | சென்னை | 8 | 2 | 6 | 4 | -1.392 |

## இன்றைய ஐ.பி.எல் (44-வது லீக்)



**அணிகள் - கொல்கத்தா vs பஞ்சாப்**

**இடம் - கொல்கத்தா மணி - இரவு 7.30**

## 400-வது டி20 போட்டியில் தோனி

இந்த ஐபிஎல் சீசனில் ருதுராஜ் காயம் காரணமாக தொடரிலிருந்து வெளியேற எம்.எஸ்.தோனி கேப்டனாக நியமிக்கப்பட்டார். இதுவரை 399 டி20 போட்டிகளில் விளையாடியுள்ள தோனி 7,566 ரன்கள் எடுத்துள்ளார். சென்னையில் சேப்பாக்கம் திடலில் நேற்று (ஏப்.25) சன்ரைசர்ஸ் ஹைதராபாத் போட்டியில் தனது 400-ஆவது டி20 போட்டியில் விளையாடினார். இதற்கு முன்பாக இந்தியாவின் சார்பில் ரோஹித் சர்மா (456), விராட் கோலி (407), தினேஷ் கார்த்திக் (412) 400க்கும் அதிகமான டி20 போட்டிகளில் விளையாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## சிந்துவின் நெகிழ்ச்சி பதிவு

இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் 42-ஆவது ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு ராஜஸ்தான் ராயல்ஸை அணிகள் பெங்களூரில் மோதின. இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஆர்.சி.பி. 20 ஓவர்களில் 205/5 ரன்கள் சேர்க்க, அடுத்து விளையாடிய ராஜஸ்தான் 20 ஓவர்களில் 194/9 ரன்களே எடுத்தது தோல்வியுற்றது.

இந்தப் போட்டியை நேரில் கண்டுகளித்த பி.வி.சிந்து தனது இன்ஸ்டா பக்கத்தில் கூறியதாவது: மூளை சொல்கிறது ஆரஞ்சு ஆர்மி (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்). ஆனால், எனது இதயம் புதிய நகரம், புதிய அணிக்கு எனக் கூறுகிறது. ஈ சாலா கப் நம்தே. பின் குறிப்பு: ஆர்.சி.பி. நீங்கள் உங்களது அதிர்ஷ்ட தேவதையை கண்டுபிடித்துவிட்டீர்கள் எனக் கூறியுள்ளார்.

## பி.எஸ்.எல். ஒளிபரப்புக்கு தடை

ஜம்மு - காஷ்மீரின் ஆனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தது இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் பாகிஸ்தான் சூப்பர் லீக்கின் அனைத்துப் போட்டிகளையும் நேரடி ஒளிபரப்பு தளமான பேன்கோட் செயலில் அதன் வலைத்தளத்திலிருந்து நீக்கியுள்ளது. இதுகுறித்து பேன்கோட் அதிகாரி ஒருவர் கூறுகையில், “பஹல்காமில் நடந்த வேதனையளிக்கும் சம்பவம் மற்றும் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தான் சூப்பர் லீக் ஒளிபரப்பை நிறுத்த முடிவு செய்துள்ளோம்” எனத் தெரிவித்துள்ளார். பேன்கோடை சோனி நிறுவனமும் பாகிஸ்தான் சூப்பர் லீக்கை ஒளிபரப்பி வருகிறது. இருந்தாலும், இதைப் பற்றி எந்தத் தகவலையும் சோனி நிறுவனம் வெளியிடவில்லை

## பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம்

ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காம் சுற்றுலா தலத்தில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதல் சம்பவம் இந்தியா மட்டுமின்றி, சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரரும், வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கூறியதாவது: தங்கள் அன்புக்கு உரியவர்களை இழந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்தியர்களான நம் அனைவரையும் பாதித்துள்ளது.

குற்றவாளிகள் அனைவருக்கும், அவர்களை ஆதரித்த அனைவருக்கும் (பயங்கரவாதிகள்), அவர்களைக் கையாண்ட அனைவருக்கும் நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இந்த சண்டை எல்லாம் என்ன சாதித்தது? கடந்த 78 ஆண்டுகளாக, ஒரு மில்லிமீட்டர் நிலம் கூட கைமாறவில்லை இல்லையா? எனவே நாம் ஏன் அமைதியாக வாழ்ந்து, நம் நாட்டை வலிமையாக்கக் கூடாது? அதுதான் எனது வேண்டுகோள் என தெரிவித்தார்.

### வக்பு சட்டத்திருத்தம் தொடர்பாக
# சுப்ரீம்கோர்ட்டில் மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல்

**புதுடெல்லி, ஏப்.26-**

வக்பு சட்டத்திருத்தம் மத உரிமைகளை பாதிக்காது என்று சுப்ரீம்கோர்ட்டில் மத்திய அரசு தெரிவித்துள்ளது

மத்திய அரசு அண்மையில் நிறைவேற்றிய வக்பு வாரிய சட்டத்திற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தி.மு.க., விடுதலைச்சிறுத்தைகள், த.வெ.க. இந்திய கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் சார்பிலும், தனி நபர்கள் சார்பிலும் என 72 ரிட் மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வு முன்பு விசாரணை நடைபெற்றது. அப்போது வழக்கில் காரசார வாதங்கள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான வழக்கில், இடைக்கால தடை விதித்து சுப்ரீம்கோர்ட்டு உத்தரவிட்டது.

இதன்படி வக்பு திருத்த சட்டத்தின்படி எந்த உறுப்பினர் நியமனத்தையும் மேற்கொள்ளக் கூடாது என்றும், ஏற்கனவே பதியப்பட்ட வக்பு சொத்துக்கள் மீது எந்த புதிய நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் சுப்ரீம்கோர்ட்டு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் வக்பு சட்டத்திருத்தம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. இதன்படி, வக்பு சட்டத்திருத்தம் என்பது வக்பு வாரியத்துக்கான சொத்துக்களை நிர்வகிப்பது தொடர்பானது என்றும், சொத்துக்களை ஒழுங்குபடுத்துவதற்காக மட்டுமே இந்த திருத்தங்கள் உள்ளன என்றும், வக்பு சட்டத்திருத்தம் மத உரிமைகளை பாதிக்காது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் செங்கோட்டையன் பங்கேற்பு

**சென்னை, ஏப்.26-**

அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்றுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உறுதியாகியுள்ளது. இதையடுத்து தேர்தலுக்கு தயார்படுத்துதல், பூத் கமிட்டி கட்டமைப்பை வலுப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்த பிறகு முதல்முறையாக அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கு முதல் வரிசையில் இடம் தரப்பட்டுள்ளது.

சமீபமாக எடப்பாடி பழனிசாமிக்கும் செங்கோட்டையனுக்கும் இடையே கருத்து மோதல் நிலவி வந்த நிலையில், சட்டப்பேரவையில் பேசிய செங்கோட்டையன், ‘எடப்படி யாரை வணங்கி...’ என்று தொடங்கிப் பேசினார். இதையடுத்து இருவருக்குள்ளும் சமாதானம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அதேநேரத்தில் அதற்கு முந்தைய நாள் அ.தி.மு.க. விருந்தில் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை.

தொடர்ந்து நேற்று அ.தி.மு.க. கூட்டத்தில் பங்கேற்றுள்ள செங்கோட்டையன், இபிஎஸ்ஸுக்கு எதிர் வரிசையில் முதலாவதாக அமர்ந்திருக்கிறார். கே.பி.முனுசாமி, ஜெயக்குமார், தங்கமணி, உதயகுமார், வேலுமணி உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர்.



**முதல்வர் மு.க. ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் சந்தித்து, அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு மூலமாக வழங்கப்படும் 2023-24 ஆண்டிற்கான தேசிய பொதுப் பேருந்து போக்குவரத்து செயல்திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு விருதுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்ட 19 விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.**

### பஹல்காம் தாக்குதலில்
# காயமடைந்தோருக்கு ராகுல் நேரில் ஆறுதல்



**ஸ்ரீநகர், ஏப்.26-**

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆறுதல் தெரிவித்தார்.

ஜம்மு - காஷ்மீர் பஹல்காம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கொடூர பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் நாட்டில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சம்பவத்தையடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று ஜம்மு- காஷ்மீர் சென்றுள்ளார். ஸ்ரீநகர் ராணுவ மருத்துவமனைக்குச் சென்ற அவர், பயங்கரவாதத் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருவோரைச் சந்தித்துப் பேசி ஆறுதல் கூறினார்.

அதன்பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அவர்,

சமூகத்தில் பிளவு ஏற்படுவதே இந்த தாக்குதலின் குறிக்கோளாக இருக்கிறது. எனவே பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றாக நிற்க வேண்டும். மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் துணையாக நானும் எங்களுடைய கட்சியும் நிற்போம். இந்த தாக்குதல் மனித குலம் மீதான தாக்குதல். அன்பையும், சகோதரத்துவத்தையும் அழிக்கும் வெட்கக்கேடான செயல்” என்று கூறினார்.

மேலும் ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா மற்றும் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார் ராகுல் காந்தி. காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களைச் சந்தித்தும் ஆலோசனை நடத்தினார்.

### இன்று போப் இறுதிச்சடங்கு:
# பங்கேற்க வாடிகன் சென்றார் ஜனாதிபதி திரௌபதி முர்மு

**புதுடில்லி, ஏப்.26-**

கத்தோலிக்க திருச்சபையின் தலைமை திருத்தந்தை போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, வாடிகனுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவருடன் நாடாளுமன்றம் மற்றும் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, மத்திய இணைய மைச்சர் ஜார்ஜ் குரியன் உள்ளிட்டோரும் சென்றுள்ளனர்.

266-ஆவது போப் ஆண்டவரான போப் பிரான்சிஸ் (88), வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக திங்கள்கிழமை காலமானார். போப் பிரான்சிஸுக்கான இறுதிச் சடங்கை புனித பீட்டர் சதுக்கத்தில் சனிக்கிழமை காலை 10 மணிக்கு (உள்ளூர் நேரம்) நடத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வில், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிலையில், இந்தியா சார்பில் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, தில்லியில் இருந்து வாடிகனுக்கு வெள்ளிக்கிழமை காலை புறப்பட்டுச் சென்றுள்ளார். இதனிடையே, போப் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு சனிக்கிழமை நடைபெறுவதையொட்டி அன்றைய தினம் நாடு முழுக்க துக்கம் அனுசரிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. நாடு முழுவதிலும் அனைத்து அரசு கட்டிடங்களிலும் உள்ள தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1,25,000 ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி
### அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவிப்பு

**சென்னை, ஏப்.26-**

மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்திட 1,25,000 ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார்.

சட்டப்பேரவை நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். முக்கிய அறிவிப்புகள் பின்வருமாறு:-

சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற தனியார் சுயநிதிப் பள்ளி மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் ரூ. 4.60 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். குழந்தைநேய திறன் மிகு வகுப்பறைக்கு ரூ. 25 கோடி மதிப்பீட்டில் தளவாடப் பொருள்கள் வழங்கப்படும். அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக நியமிக்கப்படுவார்கள்.

மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்திட 1,25,000 ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். தனியார் சுயநிதி மற்றும் பிற வாரியப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழாசிரியர்களுக்கு ரூ.4.94 லட்சம் மதிப்பீட்டில் பயிற்சி வழங்கப்படும். தனியார் சுயநிதிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி ரூ. 4.94 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

பாரதியார் மற்றும் பாரதிதாசன் கவிதைகள் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் மொழிபெயர்க்கப்படும். மூத்த வரலாற்று அறிஞர்களின் அரிய தமிழ்நாட்டு வரலாற்று நூல்கள் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும். அரசின் துறைத் தேர்வுகளுக்கான நூல்கள் ரூ.50 வழங்கப்படும் லட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும். பெரியார் குறித்த இலக்கியப் பதிவுகள் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் தொகுப்பாக வெளியிடப்படும்.

# போப் ஆண்டவர் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அஞ்சலி

**வாடிகன் சிட்டி, ஏப்.26-**

புனித பீட்டர் பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ள போப் ஆண்டவர் உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையை 12 ஆண்டுகளாக வழிநடத்திய போப் பிரான்சிஸ் (வயது 88) கடந்த 21-ந்தேதி உடல் நலக்குறைவால் மரணமடைந்தார். இது கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பினரையும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

போப் ஆண்டவரின் உடல் அவர் வசித்து வந்த சாந்தா மார்த்தா இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, வாடிகன் புனித பீட்டர் பேராலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. முதல் நாளில் உலகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து தங்கள் அன்பான போப் ஆண்டவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர் .இந்நிலையில் இன்று (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு அவரது உடலுக்கு புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் இறுதிச்சடங்குகள் நடைபெறுகிறது. தொடர்ந்து புனித மேரி மேஜர் பசிலிக்கா பேராலயத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்படுகிறது. இந்த நிகழ்வுகளில் ஏராளமான உலக தலைவர்கள் பங்கேற்கிறார்கள். இதன்படி அமெரிக்க முதல் பெண்மணி மெலனியா, ஜனாதிபதி டிரம்புடம் போப் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்துகிறார். தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் ரோம் நகர் வாடிகனில் நேற்று கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று. போப் பிரான்சிஸ் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# ராமநாதபுரத்தில் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்



**ராமநாதபுரம்,ஏப். 26-**

ராமநாதபுரத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சிம்ரன் ஜீத்சிங் காலோன் தலைமையில் நடந்தது.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர். தொடர்ந்து ராமநாதபுரம், கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி ஆர்.எஸ்.மங்கலம் திருவாடானை, போகலூர், நயினார் கோவில், மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதிகளில் உள்ள கோரிக்கைகளை வட்டார வாரியாக எடுத்துரைத்தனர்.

இந்த கோரிக்கைகளுக்கு தொடர்புடைய அலுவலர்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர். அப்போது கலெக்டர் கூறியதாவது:-

வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் மாதந்தோறும் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய தீர்வுகள் காணப்பட்டு வருகின்றது.

மேலும் விவசாயிகள் வழங்கும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்திடவும், அவர்களுக்கு உரிய பலன்கள் உரிய நேரத்தில் கிடைத்திடவும் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் விவசாயிகள் வேளாண் சார்ந்த சந்தேகங்களை அருகில் உள்ள வேளாண் அலுவலகங்களுக்கு நேரில் சென்று கேட்டறிந்து பயன் பெற்றிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, கூட்டுறவுத்துறையில் சிறப்பாக பணிபுரிந்த பணியாளர்களுக்கு மாவட்ட கலெக்டர் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் ஜூனு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் விவசாயம் (பொது) பாஸ்கர மணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



**காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நடந்த தீவிரவாத தாக்குதலால் அதிர்ச்சியில் மாரைப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்று விமானம் மூலம் மதுரை விமான நிலையத்திற்கு வருகை தந்த பாலசந்துரு மற்றும் அவரது மனைவி கஸ்தூரி ஆகியோரை கலெக்டர் சங்கீதா வரவேற்றார். உடன் திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் சிவஜோதி உள்ளார்.**

### நாரணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார மையத்தில்

# நாய்க்கடி தடுப்பூசி இருப்பு குறித்து கலெக்டர் ஜெயசீலன் நேரில் ஆய்வு

**விருதுநகர் ஏப். 26-**

விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் நாரணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார மையத்தை பார்வையிட்டு, அங்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் நாய்க்கடி தடுப்பூசி இருப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். விருதுநகர் மாவட்டம் முழுவதும் மார்ச் மாதத்தில் மட்டும் 1802 நாய்க்கடி சம்பவங்கள் பதிவாகியுள்ளன.



எனவே தெருநாய் தொல்லை உள்ள பகுதிகளிலும் தெருக்களில் நடந்து செல்லும் போதும், குழந்தைகள் தெருவில் விளையாடும் போதும் மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் இருக்க வேண்டியது அவசியம். நாய்கடி பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நாய்க்கடி தடுப்பு மருந்து இருப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. நாய்க்கடிக்கு எதிரான நடவடிக்கையை பலப்படுத்தும் நோக்கில், மாவட்ட நிர்வாகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதில் சுகாதாரத்துறையினர் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், விலங்குகளின் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் சாலைகளில் உள்ள நாய்களுக்கும், வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாய்கடிக்கு உடனடியாக சிகிச்சை பெறுவது மிக முக்கியம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே நாய் கடிக்கு ஆளானவர்கள் எந்த தயக்கமும் இன்றி உடனடியாக அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், கால்நடை பராமரிப்பு துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் விரிவான கூட்டம் நடத்தப்பட்டு, சட்டத்திற்குட்பட்ட வழிமுறைகளின்படி நாய்களால் ஏற்படும் தொந்தரவுகளை தடுக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தெரிவித்தார்.

# சக்தி கல்லூரியில் பஞ்சாயத்து ராஜ் தினம்

**ஒட்டன்சத்திரம், ஏப். 26-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கல்லூரியின் தாளாளர் வேம்பணன், கல்லூரி முதல்வர் தேன்மொழி தலைமையில் கொண்டாடப்பட்டது. விழாவில் பஞ்சாயத்து ராஜ் கூட்டத்தின் முக்கிய நோக்த்தையும், கிராம சபையின் செயல்பாடுகள்,கூட்டத்தில் மாணவிகள் பங்கெடுப்பது பற்றியும் மாணவிகளிடம் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை உன்னத் பாரத் அபியான் ஒருங்கிணைப்பாளர் சாமுண்டீஸ்வரி வணிகவியல் துறை, கோகில மீனா, ஒருங்கிணைப்பு செய்தனர்.

## ஸ்ரீவில்லிபுத்தூர்

# வைத்தியநாத சுவாமி கோயிலில் சித்திரை மாத பிரதோஷ வழிபாடு



**விருதுநகர், ஏப். 26-**

ஸ்ரீவில்லிபுத்தூரில் பழமை வாய்ந்த மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி திருக்கோவிலில் சித்திரை மாத வெள்ளிக்கிழமை மஹாப்பிரதோஷ விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதனை முன்னிட்டு மூலவரான வைத்தியநாதப் பெருமானுக்கு எதிரே வீற்றிருக்கும் நந்தியம் பெருமானுக்கு பால், தயிர், திரவிய பொடி, பன்னீர், இளநீர், சந்தனம், போன்ற மங்களப் பொருட்களால் அபிஷேகங்கள் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் நந்தி பகவானுக்கு தீபாராதனை காட்டப்பட்டது. பூஜைகளை கோவில் சிவாச்சாரியார் ஆனந்த் விஜய் பட்டர் ,மிக சிறப்பாக செய்திருந்தார். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

ஏராளமான உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இவ்விழா ஏற்பாடுகளை கோவில் தக்கார் சக்கரை அம்மாள், செயல் அலுவலர் செ.முத்துமணிகண்டன் மற்றும் கோவில் அலுவலர்கள் திருக்கோவில் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர். பிரதோஷம் என்பது மிகவும் முக்கியமானதாகும் வெள்ளிக்கிழமை பிரதோஷம் என்பது மிகவும் பிரசித்தி பெற்றது.



**திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் புதுக்கோட்டையில் மதுரை வேளாண்மை கல்லூரி இறுதி ஆண்டை சேர்ந்த மாணவர் வாழைத்தண்டு நேர்த்தி முறையான வாழையில் வரும் புஞ்சை தாக்குதலை கட்டுப்படுத்த வழிமுறைகள் குறித்து செய்முறை விளக்கம் செய்து காட்டினார்.**

# வாழை அறுவடைக்கு பிறகு கையாளுதல் குறித்து விளக்கம்



**மேலூர், ஏப். 26-**

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு மாணவி ஜெயா கிராம தங்கல் திட்டம் மற்றும் கிராமப்புற அனுபவத்திட்டத்தின் கீழ் மேலூரில் உள்ள தெற்குதெரு கிராமத்தில் வாழையில் பழத்தை அறுவடை செய்த பின்னர், அதன் தரம் மற்றும் ஆயுள் நீடிக்க, அதைச் சேமிக்கும், கையாளுதல் மற்றும் பதப்படுத்தும் முறைகள் பற்றி விளக்கினார். தொலைதூர மற்றும் ஏற்றுமதி சந்தைக்கு அனுப்பப்படும் பழங்களை, சேமிப்பு ஆயுளை நீட்டிக்க, கணிசமாக முன்கூட்டியே குளிர்விக்க வேண்டும்.

குலை அறுவடை செய்த *10 - 12* மணி நேரத்திற்குள் விளைபொருட்களை முன்கூட்டியே குளிர்விக்க வேண்டும். பெட்டிகளில் அடைக்கப்பட்ட பழங்களை *13° C* மற்றும் *85 - 90%* ஈரப்பதத்தில் கட்டாய காற்று குளிரூட்டல் மூலம் முன் குளிரூட்ட வேண்டும்.கிரீடம் நோய் வளர்ச்சியைத் தடுக்க, கைகளை *0.1* சதவீதம் பென்லேட் அல்லது தியாபெண்டசோல் கரைசலில் நனைக்க வேண்டும் என்று விளக்கினார்.

### கட்டுமான பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த

# திருமங்கலம் பகுதி கட்டுமான தொழில்துறையினர் கோரிக்கை

**திருமங்கலம், ஏப். 26-**

கட்டுமான பொருட்களின் திடீர் விலை உயர்வினை உடனடியாக கட்டுப்படுத்திடுமாறு திருமங்கலம் பகுதி கட்டுமான தொழில் துறையினர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானத் துறையில் பெரிதும் பயன்படுத்தப்படும் முக்கிய பொருட்களான ஜல்லிகற்கள், எம்-சாண்ட் , பி-சாண்ட் ஆகியவற்றின் விலைகள் திடீரென உயர்ந்தப்பட்டு இருப்பது பொது மக்கள் மற்றும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதன்படி தமிழகத்தில் ஒரு யூனிட் ஜல்லியின் விலை ரூ.*4* ஆயிரத்தி லிருந்து ரூ.5 ஆயிரம் ஆகவும், எம்-சாண்ட் ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.6 ஆயிரம் ஆகவும், பி-சாண்ட் ரூ.6 ஆயிரத்திலிருந்து ரூ.7 ஆயிரம் ஆகவும் கடுமையாக உயர்ந்து உள்ளது.இந்த திடீர் விலையேற்றம் காரணமாக நகர்ப்புற கட்டுமான நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்படுகிறது. அத்துடன் சொந்தமாக வீடு கட்ட திட்டமிட்டு வரும் ஏழை எளிய மக்களின் கனவையும் இந்த விலை உயர்வு சிதைத்து வருகிறது.கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு பல்வேறு பிரச்சனைகள் அதிகரிக்க வழிவகுக்கும்.

இது ஏற்கனவே நெருக்கடியில் சிக்கி தவித்து வரும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்திடும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

எனவே சரிவை சந்தித்து வரும் கட்டுமான துறைக்கு உதவிடும் வகையில் கட்டுமானப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தவும், சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்திடவும் கடுமையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்திட வேண்டும்.

மேலும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு, இந்த கட்டுமான பொருட்களின் திடீர் விலை உயர்வினை உடனடியாக ரத்து செய்து உதவிட வேண்டும் என் தமிழக அரசுக்கும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் மதுரை திருமங்கலம் பகுதியிலுள்ள கட்டுமான தொழில் நிறுவனங்களும், ஆயிரக் கணக்கான கட்டுமான தொழிலாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



**மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மதுரை மாநகர் 85-வது வார்டு அ.தி.மு.க. செயலாளர் ஜெயக்குமார், கவுன்சிலர் முத்துமாரி ஜெயக்குமார் ஆகியோரது இல்ல திருமண விழாவிற்கான அழைப்பிதழை அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிச்சாமியிடம் வழங்கினர். அருகில் பகுதி செயலாளர் ஜோசப் தனிஸ்லாஸ், வட்ட செயலாளர் முருகன் ஆகியோர் உள்ளனர்.**

# அ.தி.மு.க. கிழக்கு மாவட்ட அம்மா பேரவை சார்பில் திண்ணைப் பிரச்சாரம்



மேலூர், ஏப். 26-

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் தமிழ் நாடு முதல்வர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்கவும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், அம்மா பேரவை செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர்.பி.உதயகுமார் அவர்களின் ஏற்பாட்டில், அமைப்பு செயலாளரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன்செல்லப்பா அறிவுறுத்தலின் பேரில், மேலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளருமான பி.பெரியபுள்ளான்(எ)செல்வம் ஆலோசனையின் பேரில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி மேலூர் தெற்கு ஒன்றியம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட புரட்சித்தலைவி அம்மா பேரவை சார்பில் மாபெரும் திண்ணைப் பிரச்சாரம் வெள்ளலூர் விலக்கில் நடைபெற்றது.

மேலூர் தெற்கு ஒன்றியச் செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் கே.பொன்னுச்சாமி தலைமை தாங்கினார். மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ கே.தமிழரசன் தலைமை தாங்கி துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் பி.வெற்றிச்செழியன், மேலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கே.சி.பொன்ராஜேந்திரன், கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் யூனியன் வைஸ் சேர்மன் குலோத்துங்கன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் அன்புச்செல்வன், எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் விஷ்ணுவேல், அம்மா பேரவை செயலாளர் உதயகுமார், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் அரிசி கண்ணன், சருகுவலையபட்டி சரோஜா, சாந்தி அழகேசன், நயினான், வஞ்சிநகரம் கார்த்தி, சதாசிவம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் திருவாதவூர் இளவரசன், கிடாரிபட்டி சுரேஷ், பனங்காடி சுப்புராமன், குறிச்சிபட்டி கனகா பாரத், முன்னாள் கூட்டுறவு சங்கதலைவர்கள் கோட்டநத்தம்பட்டி கந்தப்பன், சுரேஷ், சொக்கலிங்கபுரம் ராஜமாணிக்கம், மேலூர் தெற்கு, வடக்கு ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், சாத்தமங்கலம் பூபதி, செல்வம், கருணாநிதி, சிவா,குணாநிதி, தொண்டர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீரங்கம் சித்திரை திருவிழா தேரோட்டம்:

# ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிய பட்டு வஸ்திரம் அனுப்பிவைப்பு



**விருதுநகர் ஏப். 26-**

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில் சித்திரை திருவிழாவில் இன்று (ஏப்ரல் 26) தேரோட்டம் நடைபெற உள்ள நிலையில் நம்பெருமாளுக்கு சாற்றுவதற்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிய பட்டு வஸ்திரம், கிளி உள்ளிட்ட மங்களப் பொருட்கள் ஸ்ரீரங்கம் அனுப்பி வைக்கப்பட்டது.

*108* வைணவ திவ்ய தேசங்களில் பிரசித்தி பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் மகளாக அவதரித்த ஆண்டாள் தன்னை பெருமாளின் மனைவியாக நினைத்து மூலவர் பெரிய பெருமாளுக்கு தொடுத்த பூமாலையை சூடிக் கொண்டார். ஆண்டாள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்து ஸ்ரீரங்கம் ரெங்கநாதரை மணம் புரிந்தார். ஆண்டாள் *108* திவ்ய தேச பெருமாள்களை மாலையாக சூடி இருப்பதாக ஐதீகம். அதைக் குறிக்கும் வகையில் ஆண்டாள் சந்நிதி உட்பிரகாரத்தில் *108* திவ்ய தேச பெருமாளும் ஓவியமாக வரையப்பட்டு உள்ளது. திருப்பதி பிரம்மோற்சவத்தில் கருட சேவையின் போது மலையப்ப சுவாமி, மதுரை சித்திரை திருவிழாவில் வைகை ஆற்றில் இறங்கும்போது கள்ளழகர், ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில் சித்திரை தேரோட்டத்தில் நம்பெருமாள் ஆகியோர் ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலை, பட்டு வஸ்திரம் அணிந்து எழுந்தருள்கின்றனர். அதன்படி ஸ்ரீரங்கம் சித்திரை திருவிழாவில் இன்று(ஏப்ரல் *26)* தேரோட்டம் நடைபெறுவதை முன்னிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிக்கொடுத்த பட்டு வஸ்திரம், கிளி உள்ளிட்ட மங்கள பொருட்கள் நேற்று ஸ்ரீரங்கம் அனுப்பி வைக்கப்பட்டது. அதனைதொடர்ந்து கிளி, பட்டு வஸ்திரம் ஆகியவை மாட வீதிகள் வழியாக மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் கோவில் செயல் அலுவலர் சர்க்கரையம்மாள், சுதர்சன் பட்டர், ரமேஷ் பட்டர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்



● தலைமைச்செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் 2025-2026-ம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல் சேவைகள் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா 2025-2026-ம் ஆண்டிற்கான தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சந்தித்து, இந்திய அரசின் மத்திய நீர்பாசன மற்றும் மின் வாரியத்தால் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு வழங்கப்பட்ட 2024-ம் ஆண்டிற்கான "சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை 2024" தேசிய விருதை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர்கள் தென்காசி ஜவஹர் மங்கத்ராம் சர்மா, முதன்மைச்செயலாளர் த.ஆபிரகாம், அரசு செயலாளர் என்.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று இந்தியாவிற்கான ஆஸ்திரேலியா நாட்டு தூதர் பிலிப்கிரீன் சந்தித்து பேசினார். அருகில் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ்தக்கர், சென்னையிலுள்ள ஆஸ்திரேலியா நாட்டு துணை தூதர்கள் சியா சாக்கி, டேவிட் எகில்ஸ்டன், கத்திரினா நாப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



● நீலகிரி மாவட்டம், உதகைக்கு நேற்று வருகைப்புரிந்த குடியரசு துணைத்தலைவர் ஜெகதீப் தன்கருக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா உள்ளார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று கைத்தறி, துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் 2021-22 முதல் 2025-26 வரையிலான கைத்தறி, துணிநூல் துறையின் அறிவிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், துறை சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. அருகில் செயலாளர் வே.அமுதவல்லி, இயக்குநர்கள் மகேஸ்வரி, இயக்குநர் இரா.லலிதா, துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



● சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக்கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் நேற்று மாவட்ட செயலாளர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கட்சி பணிகள் மற்றும் பூத் (பாகம்) கிளைகள் அமைக்கப்பட்டு வருவது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக பூத் (பாகம்) கிளைகள் அமைக்கப்பட்டு வருவது குறித்த விபரங்களை கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கினார்.

# காஷ்மீர் என்கவுன்டரில் லஷ்கர் முக்கிய தளபதி சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஏப்.26-

காஷ்மீரின் பந்திபுரா மாவட்டத்தில் நடந்த மோதலில் பயங்கரவாதி கொல்லப்பட்டான்.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டஸ் பிரண்ட் பொறுப்பேற்றுள்ளது. இதையடுத்து, துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பியோடிய பயங்கரவாதிகளை பாதுகாப்புப்படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இந்நிலையில், காஷ்மீரின் பந்திபுரா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு நேற்று ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்து சென்ற பாதுகாப்புப்படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது, அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் , பாதுகாப்புப்படையினர் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த தாக்குதலுக்கு பாதுகாப்புப்படையினர் பதிலடி தாக்குதல் நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே நடந்த மோதலில் பயங்கரவாதி கொல்லப்பட்டான். கொல்லப்பட்ட பயங்கரவாதி லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் முக்கிய தளபதி அல்தாப் லாலி என்பது தெரியவந்துள்ளது.

இந்த என்கவுன்டரை அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அனைத்து மாநிலங்களுக்கும்...(1-ம் பக்க தொடர்ச்சி)

அனுமதியின்றி சுற்றுலாப் பயணிகள் புல்வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தாக்குதல் சம்பவம் அரங்கேறிய இடத்திற்கு நடந்து அல்லது குதிரை மூலம் மட்டும் பயணம் செய்ய முடியும் என்பதால் தான் பாதுகாப்புப் படையினர் அங்கு செல்ல தாமதம் ஏற்பட்டதாக மத்திய அமைச்சர்அமித்ஷா விளக்கம் அளித்திருந்தார்.

மேலும் தாக்குதலுக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு வரை பைசரனில் இருந்து 50 கிலோமீட்டர் சுற்றளவில் எந்த தகவல் தொடர்பு சிக்னலையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தீவிரவாதிகள் எந்த தகவல் தொடர்பு சாதனத்தையும் பயன்படுத்தவில்லை என்றும் அமித்ஷா கூறியதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் அனைத்து மாநில முதல்வர்களுடன், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொலைபேசியில் உரையாடியதாக தகவல் வெளியாகி உள்ளது.

தங்களது மாநிலங்களில் வசிக்கும் பாகிஸ்தானியர்களை கண்டறிந்து அவர்களை உடனடியாக திருப்பி அனுப்புமாறு அறிவுறுத்தியதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருகிற மே 3-ம் தேதி சென்னையில்

# முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டு விழா: அமைச்சர் கோவி.செழியன் தகவல்

சென்னை, ஏப்.26-

தமிழக உயர்கல்வித் துறை சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வருகிற மே 3 ஆம் தேதி பாராட்டு விழா நடத்தப்படும் என அமைச்சர் கோவி. செழியன் பேரவையில் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பேரவையில் பேசிய அமைச்சர், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்து வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பினை பெற்றுத் தந்து தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்குமான உரிமைகளை பெற்றுத் தந்துள்ள முதல்வருக்கு பாராட்டு விழா நடத்த வேண்டும் என பல்கலைக்கழக வேந்தர்கள், துணை வேந்தர்கள், கல்வியாளர்கள், கல்லூரியின் கூட்டமைப்பினர், கல்லூரி மாணவர்கள் விருப்பம் தெரிவித்தனர். அதற்கு முதல்வர் இசைவு தெரிவித்துள்ளார்.

அதன்படி, துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மீட்டெடுத்து மாநில சுயாட்சியை உறுதிப்படுத்திய முதல்வருக்கு சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் மே 3-ம் தேதி மாலை 4 மணிக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது.

இதில் அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, தமிழக அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டிருந்த நிலையில் 10 மசோதாக்களும் ஒப்புதல் அளித்ததாகக் கருதப்படும் என்று சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

தமிழக பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பில் இருந்து கவர்னரை நீக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதாவும் இதில் அடங்கும்.

அதன்படி பல்கலைக்கழக வேந்தராக இனி முதல்வர் ஸ்டாலின் செயல்படுவார் என்று கூறப்படுகிறது.



● சிறுபான்மையினர் நலன்-வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், இனிகோ எஸ்.இருதயராஜ் எம்.எல்.ஏ. ஆகியோர் ரோம்நகர் வாடிகனில் நடைபெற்ற கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ்சின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.